விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 06 வெள்ளிக்கிழமை (22.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 215

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தர தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## கைக்குண்டுத் தாக்குதலின் எதிரொலி

# அக்கரைப்பற்றில் அதிரடிப்படை அடாவடி

# பொதுமக்கள் படுகாயம்; கடைகள் சேதம்

## அரசியல்துறை அலுவலகம் தாக்கப்பட்டது

(நமது நிருபர்)

அம்பாறை அக்கரைப்பற்றில் நேற்று நண்பகல் விசேட அதிரடிப்படையினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சுத்தாக்குதலை அடுத்து அதிரடிப்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் பொதுமக்கள் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

பலகடைகள் அடித்து நொருக்கப்பட்டன. விடுதலைப்புலிகளின் அக்கரைப்பற்று அரசியல் துறை அலுவலகம் அதிரடிப்படையினரால் சேதமாக்கப்பட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## நிலையான அரசியல் கொள்கை இந்த நாட்டிற்குத் தேவை

**– பீற்றர் ஹரோல்**

(கொழும்பு)

அரசாங்கம் மாறினாலும் மாறாத அரசியல் கொள்கை ஒன்று இந்த நாட்டிற்கு அவசியம் என்று உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல் தெரிவித்துள்ளார்.

இந்த கொள்கைப்பிரகடனம் பல மொழிகளிலும் அனைவரும் விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இது குறித்து சகல அரசியல் கட்சி (10 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் கைக்குண்டு வீச்சு இரண்டு அதிரடிப்படையினர் படுகாயம்

### சீறும் படையணி உரிமை கோரியது

(அம்பாறை)

அம்பாறை அக்கரைப்பற்றில் நேற்று நண்பகல் விசேட அதிரடிப்படையினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட கைக்குண்டுத்தாக்குதலில் இரண்டு விசேட அதிரடிப்படையினரும் ஒரு பொலிஸ்கான்ஸ்டபிளும் படுகாயமடைந்தனர்.

அக்கரைப்பற்று தர்மசங்கரி விளை டு மைதானத்தில் உள்ள சுனாமி த்த நலன்புரி முகாமில் கடமையில் தபோதே அவர்கள் மீது தாக்குதல் திற்கு அம்பாறை மாவட்ட 'சீறும்படையணி' என்ற அமைப்பு உரிமைகோரி துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அண்மைக்காலமாக அதிகரித்துவரும் போராளிகள், மக்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்தும் நேற்று முன்தினம் படுகொலைசெய்யப்பட்ட கல்முனை கிராம சேவையாளர் பாஸ்கரனின் படுகொலையைக் கண்டித்தும் இக் கைங்கரியங்களில் ஈடுபடும் அரச படைகளையும் அத்துடன் இயங்கும் நாசகாரக் கும்பல்களுக்கும்

## எஸ்.பியை விடுதலை செய்யக்கோரி ஐ.தே.கட்சி ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

குற்றச்சாட்டின் பேரில்சிறை வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள்அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவை நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி விடுதலை செய்யுமாறு ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜயசேகரா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அவ்வாறு இருக்கையில் ஜனாதிபதியால் அவரை விடுதலை செய்யமுடியும். அவரின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். எஸ்.பிக்கு விடுதலை பெற்றுக்கொடுப்பதன் மூலம் ஜனாதிபதி எவ்வித தவறையும் இழைக்கமாட்டார். இவ்வாறான ஒரு முடிபை எடுத்தால் ஜனாதிபதி சரியான முடிபு எடுத்ததாக தேசிய ரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் அபிப்பிராயம் ஒன்று கட்டியெழுப்பபடும். ஜனாதிபதி எஸ்.பியை விடுதலை செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்த ஜனாதிபதியை சந்திக்கத் தாம் தயார் எனவும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ச-8)

மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தினை அடுத்து படையினர் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர் இதில் சில பொதுமக்கள் காயமடைந்த னர். இதேவேளை அதிரடிப்படையினர் மீது நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சு சம்பவத்

எச்சரிக்கை விடுப்பதோடு எதிர்காலத்தில் இவ்வாறான நாசகார நடவடிக்கை தொட ருமானால் இதன் விளைவுகள் பாரதூர மாக இருக்கும் எனவும் அவ் எச்சரிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ச-8)

# கிழக்கில் இராணுவம் உசார்நிலையில்

(திருகோணமலை)

கிழக்கில் இராணுவத்தினர் தமது நிலை களை பலப்படுத்தி உசார் நிலையில் இருப் பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள காவல ரண்கள் நவீனமுறையில் அமைக்கப்பட்டு வருவதாகவும் அங்கு இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்லும் பாதையில் உள்ள இராணுவக்காவலரணகளும் பலப்படுத்தப்பட் டுள்ளன. இதேவேளை திருகோணமலை நகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக திருமலை தக வல்கள் தெரிவிக்கின்றன.

வாகனங்கள் யாவும் நிறுத்தப்பட்டு அதில் பயணம் செய்வோரின் அடையாள அட்டைகளை பரீசிலிக்கும் படையினர் தனி யாகவும், பொலிஸார் தனியாகவும் மேற் கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின் றது.

சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் களில் செல்வோர் மீது உடற்பரிசோதனை யும் மேற்கொள்ளப்படுகின்றது. கடற்படை யினர் புதிதாக வீதித்தடைகள் பலவற்றை ஏற்படுத்தி வாகனங்களை சோதனையிடும் பணிகளிலும் ஈடுபட்டுவருவதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

(ச)

# லண்டனில் மீண்டும் குண்டு வெடிப்புக்கள்

## அவசரகால நிலைமை பிரகடனம்

(லண்டன்)

லண்டன் சுரங்க ரயில்பாதையில் நேற்று மீண்டும் நான்கு குண்டுகள் வெடித்துள்ளன முதல் மூன்று குண்டுகளும் சுரங்க ரயில் நிலையங்களிலும் ஒரு குண்டு பயணிகள் பஸ்சிலும் வெடித்தது.

இக்குண்டு வெடிப்புக்களில் ஒருவர் படு காயமடைந்துள்ளதாக லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து சந்தேகத்தின் பேரில் இரண்டுபேர் லண்டன் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள் ளனர்.

பொலிஸார் மேலும் பலரை இக்குண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாக தேடிவரு கின்றனர். இச்சம்பவத்தை அடுத்து சுரங்கரயில் பாதைகளூடான போக்குவரத்துக்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட்டு பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவத்தை அடுத்து லண்டன் வாழ் மக்களிடையே ஒருவித அச்ச உணர்வும் குண்டுகள் தொடர்ந்து வெடிக்குமா என்ற பயப பீதியும் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இக் குண்டுத்தாக்குதலுக்கும் அல்ஹெய் டா அமைப்பிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என தாம் கருதுவதாக லண்டன் பொலிஸார் தெரிவித்தனர். சுரங்க ரயிலில் திடீரென வித்தியாசமான மணத்தை உணர்ந்த பயணிகள் இவ் ரயில்பெட்டியில் இருந்து தப்பிச்சென்ற பின்னர் குண்டு வெடித்ததால் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை.

அதேபோன்று பஸ்சில் குண்டு வெடிப்பு இடம்பெற்றபோதும் பயணிகள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டது. இதேவேளை கடந்த இரண்டு வா ரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற தொடர் குண்டு (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349[illegible]
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொடரும் யூலைப் படுகொலைகள்

(1) ஆடிவேல் விழாவை வரவேற்பதற்காக கொழும்பு காலி வீதி விழாக் கோலம் பூண்டிருந்தது. பம்பலப்பிட்டி சிறி கதிரேசன் கோவில் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன், வாழை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு வண்ண மின் விளக்குகள் பிரகாசிக்கப் பார்ப்போரை கவர்ந்திழுத்தது.

காலி வீதி யூலை 23இரவு பம்பலப்பிட்டி சிறி கதிரேசன் கோவிலில் என்றுமே இல்லாதவளவு பக்தர்கள் கூட்டம் நிரம்பிவழிந்தது. பல்வேறு கலை நிகழ்வுகள் அடியார்களை பரவசப்படுத்தின. ஆலயத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் நள்ளிரவு நடக்கப்போகும் அந்த பயங்கரத்தை அறிந்திருக்க வாய்ப்பில்லைத் தானே. கதிர்காமக் கந்தனுக்கு திருவிழா... காலியில் அது பெருவிழா... விடிந்தால் திங்கட்கிழமை... எல்லாமே அழிந்து போயிருந்தன. காலி வீதியில் கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கரும்புத்தடிகள் முருகனது பூசைக்கு பயன்படாமல் "தமிழனது முதுகிற்கு பூசை செய்ய பயன்படுத்தப்பட்டன. இந்தக் கரும்புத்தடிகளை முறித்து," தமிழரை துவசம் செய்து எரியும் நெருப்பில்தூக்கிப் போட்டதை நேரில் கண்ட தமிழர் எப்படி மறப்பர்?

அந்த ஆடிக்கலவரம் தான் இன்று தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கு வித்திட்டது எனலாம். 83ஆடி திங்களில் தமிழனது வாழ்வுக் குழிதோண்டப்பட்ட அதே நாளில் 17 ஆண்டுக்குப்பின் கட்டுநாயக்கா விமானத் தளத்தில் சிங்கள தேசத்தின் பேரினவாத அராஜகர்களுக்குக் குழிதோண்டப்பட்டது. அப்போது இந்தப் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் மீண்டுமொரு கலவரத்தைத் தொடங்க அச்சப்பட்டனர். விடுதலைப் புலிகளின் பலத்தை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையின் கீழ் தமிழ்த்தேசியம் இன்று தனது இலக்கு நோக்கி நகர்கிறது. இந்தச் சூழலில் எத்தனை கலவரத்தை சிங்களத்தலைமைகள் மேற்கொண்டாலும் அதனை முறியடிக்கத் தமிழ்த்தேசியம் தயாராகவே இருக்கிறது என்பது வெளிப்படை.

பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் வெறியாட்டம்தான்(கறுப்பு) யூலைப்படு கொலைளாகும். தமது குடிமக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசே முன்நின்று நடாத்திய கொடுரத்தை தென்னிலங்கை கண்டது. நாகரீகமுள்ள மனித சமூகம் தலைகுனிந்து நின்றது. உலகில் இவ்வாறான மோசமான சம்பவத்தை எங்கும் காணமுடியாது.

பௌத்த சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள் நன்கு திட்டமிட்டு மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையினால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் ப்டுகொலை செய்யப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தாக்குதலுக்குள்ளாகினர். தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. ஆண்டாண்டு காலமாக சிறப்புடன் வாழ்ந்த தமிழர்கள் தமது வாழ்விடங்களை விட்டு அகதிகளாயினர். வீடுகள், வர்த்தக நிறுவனங்கள் சூறையாடப்பட்டு தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. எரியும் நெருப்பில் தமிழர்களை உயிரோடு தூக்கிப்போட்டனர். இதில் பச்சிளம் குழந்தையும் தப்பவில்லை. இந்தக் கொடுமைகளை சிங்கள சமூகம் வேடிக்கை பார்த்து நின்றது.

இலங்கையின் வரலாற்றில் பல தமிழர்கள் இறைமையுடன் ஆட்சிபுரிந்ததை காணலாம். அந்நியர் எமது மண்ணை ஆக்கிரமிப்புச் செய்ததால் இவ் அரசுகள் வீழ்ச்சியடைந்தன. தமிழ்த் தலைவர்களின் தீர்க்கதரிசனமற்ற போக்கினால் ஒருதலைப்பட்சமாக ஆங்கிலேயர் தமது அதிகாரத்தைச் சிங்களவர்களிடம் கையளிப்பதை ஆமோதித்து நின்றனர்.

கபடத்தனமாக ஆங்கிலேயர்களிடமிருந்து ஆட்சி மாற்றத்தை எதிர்பார்த்திருந்த டி.எஸ். சேனநாயக்கா என்ற மாபெரும் பேரினவாதி அதை அடைந்த வேகத்திலேயே தமிழ் விரோதப் போக்கைச் செயலிலே காட்டினார். தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து கூறுபோடும் அரசியல் வியூகத்திற்கு அத்தளமிட்டு, தனது வாரிசுகளுக்கு அதனைக் கற்றுக்கொடுத்தார். டி.எஸ்.என்ற படிக்காத மேதை, படித்த தமிழ்த்தலைவர்களை ஏமாற்றி காரியம் சாதித்தார். அன்று தமிழர்களைச் சிங்களத் தலைமைகள் ஏமாற்றின. ஆனால் இன்று தமிழர்களை ஏமாற்ற முடியவில்லை.

நள்ளிரவு திம்பிரிகள் சாயவில் மூட்டிய தீ தென்னிலங்கையெங்கும் வேகமாக பரவியது. யூலை 24ஆம் திகதி வழக்கம்போல் கொழும்பு மாநகரம் சுறு சுறுப்புடன் காணப்பட்டது. அன்று திங்கட்கிழமையாகவிருந்ததால் அதுமேலும் உற்சாகமாகவிருந்தது. அன்றாடக் கடமைக்காக சனக்கூட்டம் காலையில் நிரம்பி வழிந்தது. காலை 9 மணி இருக்கும்... கோட்டையில் இருக்கும் தமிழரது கடைகள் சூறையாடப்பட்டு கொழுத்தப்பட்டன. அது மேலும் தீவிரமடைந்து தமிழர்கள் வர்த்தக ஆதிக்கம் செலுத்திய புறக்கோட்டைப்பகுதிக்கும் பரவியது. தமிழரது வர்த்தக நிறுவனங்கள் எரிக்கப்பட்ட போது எழுந்த புகை மண்டலம் வானத்தை இருட்டாக்கியது. சில மணி நேரம் விமானப்போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அதேபோன்று 17 வருடங்களின் பின் கட்டுநாயக்கா தாக்குதலில் விமானம் பறப்பதை நிறுத்தி தமது பழியை தீர்த்துக்கொண்டனர் தமிழர்கள்.

கொழும்பு மாநகரப்பகுதிகளிலும், அதை அண்டிய புறநகர்ப்பகுதிகளிலும் இருந்த தமிழரது வாழ்விடங்கள் அடித்து நொருக்கப்பட்டன. சிங்களக் காடையர் கூட்டம் தமிழரது சொத்துக்களைத் தேடி அழித்தனர். தமது கடமைகளை ஆற்ற பஸ்களில் பயணம் செய்த தமிழர்கள் வழிமறிக்கப்பட்டு கீழே இறக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டு கூரிய ஆயுதங்களினால் தாக்கி கொல்லப் பட்டனர். வீதிகளில் நடந்துசென்ற தமிழர்கள் பொல்லுகளாலும், கம்பிகளாலும் தாக்கப்பட்டு அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பினுள் போடப்பட்டனர்.

கொழும்பு மாநகர அனைத்து வீதிகளிலும் தமிழருக்குச் சொந்தமான வணிக நிறுவனங்கள் இருந்தன. ஆதலால் அனைத்து வீதிகளிலும் தீச்சுவாலை சுடர்விட்டு எரிந்தன. எங்கு பார்த்தாலும் அழுகை ஒலியும், கூக்குரல்களும் கேட்ட வண்ணமாயிருந்தன. தமிழனாகப் பிறந்தது தான் இவர்கள் செய்த ஒரே குற்றம். அதற்காகவே தமிழர்கள் துன்பத்தை அனுபவித்தார்கள். அந்தத் துன்பத்தைத் தந்தவர்களுக்கே திருப்பித் துன்பத்தைத்தர வேண்டுமென்ற உறுதிப்பாட்டோடு தமிழ்த்தேசியம் எழுந்தது.

ஒன்றரை நூற்றாண்டுகளாக தமிழ்-சிங்கள ஆட்சியுரிமைகளை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேய அரசுகள் இந்த நாட்டைவிட்டு வெளியேறும்போது தமிழரது ஆட்சியுரிமைகளை புறந்தள்ளி சிங்கள ஏகாதிபத்தியவாதிகளிடம் ஆட்சி அதிகாரங்களைக் கையளித்து சுதந்திரப்பிரகடனம் செய்தனர். அன்று தொட்டு பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் மேலான்மை தமிழர்களை நசுக்கியது. தமிழர்கள் தமது உரிமைக்கான குரலை உயர்த்தியபோது அவர்கள் மீது வன்முறைகள் ஏவப்பட்டன. தமிழ் அரசியல் தலைவர்கள் அகிம்சைவழிப் போராட்டங்களை நடாத்தி நீதி கேட்டபோது சிங்களக் காடையர்களை ஏவி பேரினவாதிகள் தாக்குதல் நடாத்தினர்.

தமிழரின் சுதந்திரமான வாழ்வைப் பறிக்க பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கும் தலைமை தாங்கிய ஜே.ஆர்.ஜெயவாத்தனா அதில் முற்று முழுதாக தோற்றுப்போய் தனது பதவிக்காலத்தை முடித்துக்கொண்டு வெளியேறினார். ஆர்.பிறேமதாஸாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆடிக்கலவரம் தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கு வித்திட்டு, விடுதலைப் போராட்டத்தை மேலும் வீச்சாக்கியது. அதுவே இன்று உச்ச நிலையடைந்து தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்பும் உன்னத நிலைக்கு உயர்ந்துள்ளது.

தமிழினப்படுகொலை செய்தவர்கள், தமிழ் இளைஞர், யுவதிகளைக் காரணமின்றிக் கைது செய்து சிறையில் அடைத்தவர்கள், தமிழ்ப் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியவர்கள், தமிழரது சொத்துக்களைச் சூறையாடி ஏப்பம் விட்டவர்கள், தமிழரது சொத்துக்களுக்கு தீமூட்டி எரித்தவர்கள், தமிழரது நிலங்களை ஆக்கிரமித்து ஏதிலி யாகியவர்கள், இந்த பௌத்த சிங்களப் பேரினவாதி

**கலி**

கள்தான். இவர்கள் இன்றும் திருந்தினார் களா? இனி மேலும் திருத்துவார்களா? பேரினவாதிகள் என்றால் தமிழருக்கு தீங்கு செய்த அனைத்து சிங்களவர்களுக்கும் பொருந்தும். பேரினவாத வன்முறை கட்டவிழ்த்து விட்டப்படும்போது மனித உரிமை வாதிகளும் நீதித்துறையினரும் மௌனமாகிக் கொண்டனர், என்பது தான் இங்கு வேடிக்கையானது.

யூலை 23 நள்ளிரவு தொடங்கிய சிங்கள ஆட்சியாளர்களின் வன்முறை இந்திய வெளிவிவகார அமைச்சர் பி.வி.நரசிம்மராவ் இலங்கை வரும்வரை நீடித்தது. ஜனாதிபதி ஜே.ஆர். ஜெய வர்த்தனாவோ அல்லது அரசுத்தலைவர்களோ தமிழர்கள் மீது தாக்குதல் நடைபெறுவதை நிறுத்துமாறு கோரி ஒரு அறிக்கை கானும் விடவில்லை என்பது தமிழர்களை ஆத்திரம் கொள்ளச்செய்தது. (தொடரும்)

## விபத்தில் வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு உள்ளிருந்து வந்த கண்காணிப்புக்குழுவின் வாகனம் நல்லூர் வீதியால் துவிச்சக்கர வண்டியில் வந்துகொண்டிருந்த வயோதிபருடன் மோதியதில்அவ் வயோதிபர் காலில் காயமடைந்தநிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இவ் விபத்தில் இணுவிலைச்சேர்ந்த பாலசுப்பிரமணியம் (வயது 60) என்பவரே காயமடைந்தவராவார். (ந-19)

## கலைச்சங்கம நிகழ்வு

(கொழும்புத்துறை)

மூவினக் கலைஞர்களின் பங்கேற்பில் யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் மாபெரும் கலைச்சங்க நிகழ்வு எதிர்வரும் 30,31ஆம் திகதிகளில் மாலை 6.30 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் 40வது ஆண்டு விழா சிறப்பு கலைச்சங்கமத்தில் முதல்நாள் 200 சிங்களக் கலைஞர்கள் வழங்கும் பல்வேறு நிகழ்சிகளும், ஏனைய 18 மன்றங்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இதன் தொடர்ச்சியாக மறுநாள் கலைஞர் கௌரவிப்புக்களுடன் சிறப்பு நிகழ்வாக "கொல் ஈலுங் கொற்றம்" உத்துருவ நாடகமும் இடம்பெறவுள்ளது.

இதுதவிர 29,30,31ஆம் திகதிகளில் றக்காவீதியில் அமைந்துள்ள கலாமுற்றத்தில் காலை 10.00மணிமுதல் மாலை 5.00 மணிவரை திருமறைக் கலாமன்றத்தின் 40 ஆண்களின் பதிவுகள்? ஆவணங்கள் கண்காட்சிக்காக வைக்கப்படவுள்ளன. (க-51)

## கட்டாக்காலிகளால் பயிர்கள் நாசம்

(மருதங்கேணி)

வடமராட்சிப் பகுதியில் கட்டாக்காலி கால் நடைகளால் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள்.

பெருமளவு மாடுகள் தோட்டங்களில் உட்புகுந்து வெங்காயச் செய்கைகளை அழித்து வருகின்றன.

இதனால் விவசாயிகள் இரவில் காவல் செய்யவேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பயிர்களை நாசமாக்கும் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு எந்த தொண்டு நிறுவனமும் முன்வராததையிட்டு விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். குறிப்பாக விவசாய அமைப்புகள் இவ்விடயத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு விவ சாயிகள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-35)

## ஜெருசலேம் பயணம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையில் உள்ள புனித செபமாலை அன்னை ஆலயத்தின் பங்குத் தந்தையான அன்ரன் மத்தாயஸ் அடிகளார் குறுகிய கல்வி கற்பதற்காகவென ஜெருசலேமிற்கு பயணமாகியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-51)

## சிறந்த சுற்றாடலில் பாடசாலை

(கொழும்பு)

சிறந்த சுற்றாடலைக் கொண்ட பாடசாலையை தெரிவுசெய்வதற்கான அகில இலங்கை ரீதியிலான போட்டி நிகழ்ச்சி ஒன்றினை கல்வியமைச்சுடன் இணைந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடத்தவுள்ளது.

பாடசாலை சுற்றாடலை பேணிப் பாதுகாத்து அதன்மூலம் முழுநாட்டினது சூழலை பாதுகாப்பது தொடர்பாக பாடசாலை சமூகத்தினரை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் இந்தப் போட்டி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் லலிதா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக மாவட்ட மட்டத்தில் சிறந்த சுற்றாடலைக்கொண்ட பாடசாலை தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்திலான தெரிவு இடம்பெறவுள்ளது.

மதிப்பீட்டு விடயங்கள் உள்ளடங்கிய வினாக்கொத்து சகல பாடசாலைகளுக்கும் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் படிவத்தை பூர்த்திசெய்து எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதிப் பணிப்பாளர் நாயகம் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார். (க-9)

## எரிபொருள் எடுத்துச் செல்ல —படையினர் தடைவிதிப்பு—

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான படுவான்கரைப்பகுதிக்கு எரிபொருட்களை எடுத்துச்செல்ல படையினர் தடைவிதித்துள்ளனர்.

கடந்த மூன்று தினங்களாக பெற்றோல், மண்ணெணெய், டீசல் என்பவற்றை கொண்டு செல்ல தடைவிதித்துள்ளதுடன் பெற்றோல் எடுத்துச்சென்ற பௌசர் ஒன்றும் படையினரால் தடுக்கப்பட்டுள்ளது.

படையினரின் இந்த நடவடிக்கையினால் குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். தற்போது அப்பகுதியில் சிறுபோக நெற்செய்கை இடம் பெறுவதுடன், ஆலய உற்சவங்களும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

## திடீர் அனர்த்தங்கள் நிகழ்ந்தால் எவ்வாறு எம்மைப் பாதுகாப்பது?

### மட்டு.மாணவ, ஆசிரியர்களுக்குப் பயிற்சி

(மட்டக்களப்பு)

திடீர் அனர்த்தங்களின் போது பாதுகாப்புப்பெற்றுக்கொள்வது தொடர்பாக பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கும் திட்டம் ஒன்றை போர்த்துக்கல் நாட்டின் **Medicos do mundo** என்ற நிறுவனம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல் படுத்தி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் அனுசரணையுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படுவதாகவும், இத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கென பட்டிருப்பு கல்வி வலயத்தில் ஒந்தாச்சிமடம் வித்தியாலயமும், மட்டக்களப்பு வலயத்தில் கல்லடி விபுலானந்தா வித்தியாலயமும், கல்குடா, கல்வி வலயத்தில் கல்குடா நாமகள் வித்தியாலயமும் முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

### கஷ்ட, அதிகஷ்ட பிரதேசங்களில் பணிபுரியும்

## ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை

(திருகோணமலை)

கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேச ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை என்று தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தமிழர் ஆசிரியர் சங்கம் இவ்விடயம் தொடர்பாக கல்வி அமைச்சுக்கு தமது அதிருப்தியையும், கவலையையும் தெரிவித்ததோடு ஜூலை மாதச் சம்பளத்துடனாவது இக் கொடுப்பனவுகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளது. (க-7)

## தெரு விளக்கு பொருத்தக் கோரிக்கை

(இணுவில்)

இணுவில் தியேட்டர் வீதியில் உள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு பொருத்துமாறு தியேட்டர் வீதி பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினமும் ஆயிரக்கணக்கான பொது மக்கள் போக்குவரத்து செய்யும் இவ்வீதி இரவு நேரத்தில் இருளில் மூழ்கி இருப்பதாகவும் இதனால் விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (க-122)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

**39**

மாமல்லவபுரத்துக் கடற்கரையில் கூடியிருக்கும் மக்கள் மத்தியில் தின்பண்டங்களை விற்



வீடுகளில் வைப்பதற்காக மாமல்லவ புரத்தில் விற்கப்படும் விநாயகர் சிலை.

பனை செய்வதில் பெண்கள் தீவிர மாக ஈடுபட்டிருந்தனர்.

கும்பிளா மீனைக் கோதுமைமாக் கரைசலில் தோய்ந்தெடுத்து அதனைப் பொரியலாக்கி கடற் கரையோரமாகக் கொண்டு சென்று விற்பனை செய்வது அப்பகுதியில் முக்கிய வியாபாரமாக இருந்தது.

மாமல்லவபுரத்துக் கடலோரத் தில், கூடியிருப்போர், கடலில் குதூ கலத்துடன் குளிப்போர் எல்லோருமே தங்கள் மனக் கவலைகளை மறந்து இன்பத்தில் திளைத்தனர். அந்தக் காட்சி அவ்விடத்தில் மகிழ்வாக இருந்தாலும் என் ஈழத்து உறவுக ளுக்கு அப்படியொரு சூழ்நிலையில் லையே என்ற வேதனை உப்புக்காற் றினூடே வெம்பித்துப் பெருமூச்சாக வெளியேறியது. எனது மூச்சின் வெப் பம் மாலைக் கதிரவனையும் சுட்டு விட்டதுபோல், அவன் மேற்றிசையில் ஓய்வெடுக்க, ஐந்து பேருமாக மாமல்லவபுர பஸ் நிலையத்திற்குப் பொடிநடையாகச் சென்றோம்.

## இருப்பிடம் திரும்பினோம்

மாமல்லவபுரத்தில் அவரவர் வாங்கிக் கொண்ட கற்சிலைக ளுடன் பஸ் நிலையத் தில் காத்திருந்தோம்.

கோயம்பேடு பஸ் நிலையத்திற்குச் சென்றால் மட்டுமே அங்கிருந்து நுங் கம்பாக்கத்தை அடையமுடியும். கோ யம்பேடு பஸ்நிலை யத்திற்குச் செல் கின்ற பஸ்கள் எல் லாமே பயணிகளின் பாரமிகுதியால், எவ் விடத்திலும் தரிக் காமல் சென்று விட் டன.

பொழுது சாய்ந் தால் பஸ்ஸில் இடம் பிடிப்பது முடியாத காரியம் என்பதை அந்த நேரத்தில் புரிந்து கொண் டோம் அந்த உண்மையைத் தாம் ஏற் கனவே புரிந்துகொண்டதாகவும், எனி னும் அதனை மற்றவர்கள் கருத்தில்

# தேடித் திரிந்தும் கிடையாத கறுப்பரிசிச் சோறு

எடுக்கவில்லையெனவும் நம்முடன் வந்த ஒரு சிலர் கூறிக்கொண்டதை யும் இந்த இடத்தில் குறிப்பிடாமல் விடுவது பயணக்கட்டுரைக்கு அவ் வளவு அழகல்ல.

நீண்டநேர காத்திருப்பிற்குப் பின் னர் மாமல்லவபுர பஸ் நிலையத்தை வந்தடைந்த பஸ்ஸில் ஐந்து பேரும் ஏறிக் கொண்டோம். ஐவருக்கும் இருப்பிட வசதி கிடைக்கா விடினும் நிற்பதற்காவது இடம் கிடைத்ததே என்ற மனநிறைவுடன் பயணம் தொடர்ந் தது.

பஸ்கோயம்பேட்டை அடைந்த போது கைக்கடிகாரம் இரவு 9.45 ஐக்காட்டியது.

பொதுவாக இரவு 10 மணியைக் கடந்து விட்டால் பஸ்சேவையும் ஓய்வெடுத்துக் கொள்ளும். அத னால் கோயம்பேடு பஸ்நிலையத் திலிருந்து ஆட்டோவின் உதவி யுடன் நுங்கம் பாக்கத்தைச் சென்ற டைந் தோம்.

## இரவுச் சாப்பாடு

சோறே மதிய உணவாக இருப்ப தால் மத்தியானங்களில் அதிகம் சாப்



மாமல்லவீ கடலோரத்தில் மண்விளையாடும் குழந்தை

பிடமுடிவதில்லை. கறுப்பரிசிச் சோறு மாமல்லவபுரத்திலும் கிடைக்க வில்லை.

கறுப்பரிசிச்சோற்றிற்காகப் பல இடங்களில் அலைந்து களைத்துப் போன நாம் முயற்சி திருவினையாக் கும் என்ற ஆன்றோர் மொழிதோற்று விட்டதாக நினைத்துக் கொண்டு அந்த முயற்சியை அப்படியே கை விட்டுவிட்டோம்.

கோயம்பேட்டில் ஆட்டோவில் ஏறிய நாம் நுங்கம்பாக்கத்தில் உள்ள கணேசன் விலாஸ் சாப் பாட்டுக்கடை யில் இறங்கிக் கொண்டோம்.

கணேசன் என்பது விநாயகனைக் குறித்தாலும் அது மாமிசக்கடை என் பதை இங்கு கூறாமல் விடமுடியாது.

இரவுச் சாப்பாட்டுக்காக மட்டுமே அந்தக் கடை திறக்கப்படும். லோய லாக்கொலிச் கொஸ்ரலில் இருந்த எமக்கு இரவுச் சாப்பாட்டுக்காக வாடிக்கைக் கடையாக அதை வைத் துக்கொண்டோம். சிறிய கடையாக இருந்தமையால் எமக்கு விருப்பமான தைத் தெரிவித்துச் செய்விக்க முடிந் தது. நாம் யாழ்ப்பாணத்தவர்கள் என்பதால் கடை உரிமையாளர் எம் முடன் மதிப்பாகப் பழக்கிக் கொண் டார். நுங்கம்பாக்கத்தில் இரவில் சோறுசாப்பிடக் கூடிய ஒரு கடையா கவும் அது இருந்தது. இரவுச் சாப் பாட்டைக் கணேசன் விலாஸில் முடித் துக் கொண்டு கொஸ்ரலை நோக்கி நடந்தோம்.

**என் . விஜயன்**

(திங்கள் வளரும்)

பல்கலை கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம்

## அமைச்சருடனான பேச்சுவார்த்தை வெற்றியளிக்கவில்லை

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களின் கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங் கப் பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இடையில் கடந்தசெவ்வாய்க்கிழமை மாலை விசேட பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

பலநாட்களாகக் கல்விசாரா ஊழியர்களால் மேற்கொள்ளப் பட்டுவரும் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு முடிவு காண் பதற்காகப் பேச்சுவார்த்தை நடை பெற்றுள்ளது.

எனினும், இந்தப் பேச்சுவார் த்தை வெற்றியளிக்கவில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் ரஞ்சித் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டால் 9 ஆயிரத்துக் கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு 8.7 மில்லியன் ரூபாவை வழங்க நேரிடுவதாக சுட்டிக்காட்டிய அவர், கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில் 3.5 மில்லியன் ரூபாவை இடைக்காலக் கொடுப்பனவாக வழங்குவதற்கான யோசனையை அமைச்சர் முன் வைத்தார் என்று தெரிவித்துள்ளார்.

எனினும், கல்விசாரா ஊழியர் கள் இந்த யோசனையை நிராகரித் துள்ளனர். இது தொடர்பாக கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்க செயலாளர் சாந்த பண்டாரவிடன் கேட்டபோது, இவ்விடயம் குறித்து தொழிற்சங்கத்துடன் மேலும் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரி வித்துள்ளார். (அ-2)

## சோதனைச் சாவடி அகற்றப்பட்டது

(கிளிநொச்சி)

ஏ-9 வீதியில் ஓமந்தைப் பகுதி யில் உள்ள மீள் குடியேற்றக் கிரா மத்தில் படையினரால் கடந்த செவ்வாய்க்கிழமை அமைக்கப் பட்ட சோதனைச்சாவடி 12 மணி நேரத்தில் அகற்றப்பட்டுள்ளது.

ஓமந்தை அரசன் குளத்தில் சோதனைச் சாவடியை ஏற்படுத்திய படையினர் அவ்வழியினால் சென்ற மக்களையும், வாகனங்களையும் சோதனை நடத்தி வந்தனர்.

இச் சம்பவத்தையடுத்து வவு னியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஆகியோர் வவுனியா மாவட்டக் கண்காணிப்புக் குழுவின் தலை வருக்கு முறையிட்டனர்.

இதனையடுத்து வவுனியா மாவட்டக் கண்காணிப்புக் குழுவி னர் மாவட்ட இராணுவத் தளபதி யின் கவனத்திற்குக் கொண்டு வந் ததையடுத்துக் குறிப்பிட்ட சோத னைச்சாவடி அகற்றப்பட்டது.(ச-8)

## பயணக் கட்டுரை – வாசகர் பார்வை

திரு.என்.விஜயன் இணுவில்
(தமிழகப் பயணம் கட்டுரையாளர்)
வலம்புரி
யாழ்ப்பாணம்.

*அன்புடையீர்,*

*தாங்கள் வலம்புரி நாளிதழில் எழுதிவரும் தமிழகப் பயணம் என்ற பயணக் கட்டுரை வாசிப்பவர்களில் ஒருவன். தாங்கள் அண்மை யில் தமிழகம் சென்று அங்கு நடந்த, நடக்கின்ற, நடைபெற இருக் கின்ற அனைத்து விடயங்களையும் ஓர் நேர்மையான நடுநிலைமை யுடன் செயற்படுகின்ற ஒரு பத்திரிகையாளன் எப்படி கவனிப்பானோ அதேபோல சில குறிப்பிட்ட நாட்களுக்குள் இதுவரை தாங்கள் எழுதிய கட்டுரையில் இருந்து தெரிந்துகொண்டேன். குறிப்பாக 'திருடனைப் பிடித்த கையடக்கத் தொலைபேசி' மற்றும் 'இறைவனுக்கே வடிவங் கொடுப்பவர்களின் வாழ்க்கை' தமிழக வாகன சேவை, தமிழக காவல்துறை, தமிழக நீதிமன்று என பல்வேறு விடயங்களை நாம் வீட்டில் இருந்தவாறே மிகவும் சுலபமாக அறிய முடிந்ததையிட்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். தங்களின் கட்டுரையை வாசிக்கின்ற போது நாமும் தமிழகத்தில் நிற்பது போன்றும் அல்லது ஒரு முறை தமிழகம் சென்று வரவேண்டும் போலவும் தோன்றுகின்றது. மற்றும் தமிழகப் பத்திரிகைகளுக்கும் நமது யாழ்.குடாநாட்டுப் பத்திரிகை களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் தங்கள் கட்டுரை யூடாக நான் விளங்கிக் கொண்டேன். அத்துடன் தொடர்ந்தும் உங் கள் சிறப்புப் பயணக்கட்டுரை வெளிவரவேண்டும் என்று வாழ்த்து கின்றேன்.*

*இணுவையூர்*
*செந்தமிழன்*

# கொழும்பில் நடமாடும் விடுதலைப் புலிகளின் கையடக்க தொலைபேசி இலக்கங்களை கண்டறியும் முயற்சியில் பொலிஸார்!

(கொழும்பு)

கொழும்பு நகரில் நடமாடும் விடுதலைப் புலிகளின் கையடக்க தொலைபேசி இலக்கங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கிலிருந்து கொழும்புக்கு வந்துள்ள பெருமளவான புலிகள், கொழும்பில் பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதாகவும் இவர்களது நடவடிக்கைகளைக் கண்டறியும் முயற்சியில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

புலிகள் பயன்படுத்தும் பெரும்பாலான கையடக்கத் தொலைபேசிகள் முன்கூட்டியே பணம் செலுத்திப் பெறப்படும் அட்டைகள் மூலம் இயங்குவதால் உரியவர் பற்றிய பதிவுகளில்லை.

இதனால் இவற்றை வைத்திருப்பவர்களைத் தேடிப் பிடிப்பதில் பெரும் சிரமங்களிருக்கின்றன. அத்துடன், அட்டைகள் வழங்குபவர்களால் உரையாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்படுவதில்லை. இதனால் இவர்களது உரையாடல்கள் பற்றிய விபரங்களையும் அறிய முடியாதிருக்கிறது.

தற்போது கொழும்பில் பெருமளவு புலிகள் குழுக்களாகச் செயற்படுகின்றனர். இவர்களில் ஒரு குழுவே மேஜர் முத்தலிப்பின் நடமாட்டத்தையும் கண்காணித்து வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கு வந்துள்ள புலிகளின் குழுக்களெல்லாம் ஒரே பணிகளைச் செய்யவே வந்துள்ள போதிலும் ஒவ்வொரு குழு பற்றியும் மற்றைய குழுக்களுக்கு எதுவும் தெரியாது. இங்கு வந்துள்ள குழுக்களுக்கிடையே எதுவித தொடர்புமிருக்காது.

ஒரு குழுவைச் சேர்ந்த எவராவது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுவிட்டால் மற்றைய குழுக்களைப் பற்றி விசாரணைகளின் போது தெரிவித்துவிடக் கூடாதென்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனினும், இந்தக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கிளிநொச்சியிலிருக்கும் பொறுப்பாளர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பதாகவும் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

(க-4)

# விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சில் 408 பட்டதாரிகளுக்கு நியமனம்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் திட்டத்தின் கீழ் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளபட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

தொழில்நுட்பத்தை கிராமங்களுக்குக் கொண்டு செல்லும் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் நிலையங்களில் இந்த பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அதிகாரிகளாக 315 பேரும் திட்டமிடல் உதவி அதிகாரிகளாக 12 பேரும் உதவி அதிகாரிகளாக 16 பேரும் தொழில்நுட்ப மனித வள உதவி அதிகாரிகளாக 65 பேரும் நியமனம் பெறவுள்ளனர்.

இதற்காக 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் விண்ணப்பித்து இருந்ததாகவும் அவர்கள் அனைவரையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்திருந்ததாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)

# அரசியல் யாப்புசபை, தேர்தல் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க சட்டங்கள் இயற்றப்படவேண்டும்!

(கொழும்பு)

அரசியல் யாப்புசபை மற்றும் தேர்தல் ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்குத் தேவையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்று சபாநாயகர் டபிள்யு.ஜே.எம். லொக்குபண்டார கடந்த செவ்வாய்க் கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் இதுபற்றித் தெரிவிக்கையில்,

அரசியல் யாப்புசபை மற்றும் தேர்தல் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் 17 ஆவது அரசியல் சட்ட மூலத்திற்கமைய புதிய சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

இது குறித்துப் பாராளுமன்றமும் அவதானம் செலுத்தவேண்டும். குறிப்பிட்ட தினங்களுக்குள் உறுப்பினர்கள் நியமிக்கப்படாவிட்டால் அவர்கள் நியமிப்பதற்குத் தேவையான சட்டங்களை உள்ளடக்க வேண்டும்.

எனவே, புதிய சட்டங்களை உருவாக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-2)

# மலையக அபிவிருத்தி அதிகாரசபை சட்டமூலம்

## திருத்தங்களுடன் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

மலையக அபிவிருத்தி அதிகாரசபை சட்டமூலம் சில திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மலையகத்தில் வாழும் மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

கிராமிய புனரமைப்பு ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்களைக் கடந்துள்ள போதும் உரிய முறையில் மலைநாட்டுப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்படவில்லையென்றும் அமைச்சர் தெரிவித்தார். (08)

# கௌரவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கடந்த 11 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற சிசு உதான சாதனையார் விருது வழங்கும் நிகழ்வில் பரிசில் பெற்ற யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை கன்னாதிட்டியில் உள்ள மக்கள் வங்கியின் பிரதேச தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

(க-2)

# செவ்வாய்க்கிரகத்துக்கு ராக்கெட்டில் கிருமிகள்!

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

ஆராய்ச்சிக்காக, செவ்வாய்க் கிரகத்துக்கு ராக்கெட்டில் கிருமிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுவரை நடைபெற்ற ஆராய்ச்சிகளில், பூமியைத் தவிர மற்ற கிரகங்களில் உயிரினங்கள் வசிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. செவ்வாய்க் கிரகத்தின் சில அடிப்படைத் தன்மைகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்தபோது, அங்கு ஒரு காலத்தில் தண்ணீர் இருந்திருக்கக் கூடும் என்றும் செவ்வாய்க் கிரகத்தின் துருவப் பகுதிகளில் பனிப்பாறைகள் இருப்பதற்கான அடையாளங்கள் தென்படுவதாகவும் தெரியவந்தது.

தண்ணீரும், காற்றும் இருந்தால் அங்கு உயிர்கள் வாழமுடியும் என்பதால் செவ்வாய்க் கிரகத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் அமெரிக்காவின் "நாசா" விண்வெளி ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வசிக்க முடியுமா? அதற்கான சூழ்நிலைகள் அங்கு உள்ளதா? என்பது பற்றி ஆராய்வதற்காக "நாசா" விண்வெளி நிறுவனம் இங்கு ராக்கெட் ஒன்றை அனுப்பி வைத்தது. அந்த ராக்கெட்டுடன் இணைக்கப்பட்டு இருந்த "ஆப்பர்சூனிட்டி" என்ற விண்வெளி ஓடம் கடந்த ஆண்டு செவ்வாய்க்கிரகத்தில் தரை இறங்கியது. ஆராய்ச்சிக்காக விண்வெளி ஓடத்தில் விஞ்ஞானிகள் பசில்லஸ் சாபென்சிஸ் என்ற கிருமிகளையும் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

இந்தத் தகவலை "நாசா"வின் நுண் உயிரியல் விஞ்ஞானியான கஸ்தூரி வெங்கடேஸ்வரன் இப்போது தெரிவித்துள்ளார். தமிழ் நாட்டைச் சேர்ந்த இவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் படித்தவர். அமெரிக்காவில் பசடேனா என்ற இடத்தில் உள்ள "நாசா"வின ராக்கெட் ஒருங்கிணைப்பு நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

ராக்கெட்டில் பயணம் செய்த போதும் விண்வெளி ஓடம் செவ்வாய்க் கிரகத்தில் தரை இறங்கிய போதும் அதில் இருந்த கிருமிகள் உயிருடன் இருந்திருக்கக் கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிரகத்தின் வெப்ப நிலை மைனஸ் 60 டிகிரி செல்சியஸ் ஆகும். மிகக் குளிர்ச்சியான அந்த வெப்ப நிலையிலும் கிருமிகள் உயிர் வாழக்கூடும் என்று கருதப்படுகிறது. இந்த ஆராய்ச்சியின் மூலம் செவ்வாய்க் கிரகத்தைப் பற்றி சில புதிய தகவல்கள் கிடைக்கும் என விஞ்ஞானிகள் எதிர்பார்த்துள்ளனர். (ற)

# இராசிபலன்

**22.07.2005**

**(ஆடி 6, வெள்ளிக்கிழமை)**

**பிரதமை பிற்பகல் 3.10 வரை**

**திருவோணம் பின்னிரவு 12.58 வரை**

**இராகுகாலம் 10.31-12.01 வரை**

**சுபநேரம் -6.01-7.31 வரை**

| | |
|---|---|
| மேடம் | அதிகாரம், காரிய சித்தி, தொழில் மேன்மை, உறவினர் சந்திப்பு. |
| இடபம் | கட்டுப்பாடு, காரியதாமதம், தெய்வசிந்தை, போசனசுகம். |
| மிதுனம் | குடும்பக் கவலை, காரியதடங்கல், பண விரயம், உடல்நலக் குறைவு. |
| கடகம் | களஸ்திரநன்மை, முயற்சி கைகூடும், பிறர் உதவி, தெய்வதரிசனம். |
| சிங்கம் | காரிய அனுகூலம், தெய்வசிந்தை, தேக நலன், புதிய சிந்தை. |
| கன்னி | புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், சுப செலவு, அபகீர்த்தி. |
| துலாம் | மனக்கிலேசம், முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு, பிரயாணம். |
| விருச்சிகம் | அன்னியர் சந்திப்பு, சுவாரஸ்யம், போசன சுகம், தெய்வதரிசனம். |
| தனுசு | அதிக பிரயாசை, தனவிரயம், வேலை சுமை, உறவினர் வெறுப்பு. |
| மகரம் | தெய்வதரிசனம், நல்ல முயற்சி, போசன சுகம், பிரயாணம். |
| கும்பம் | இடமாற்றம், சுபசெலவு, முயற்சி தாமதம், பண விரயம். |
| மீனம் | கீர்த்தி, காரிய நன்மை, போசன சுகம், தெய்வசிந்தை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

# செம்பியன்பற்று தெற்கு அபிவிருத்தி செய்யப்படும்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நியாப் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு செம்பியன்பற்று தெற்கு கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக் கிராமத்தில் செய்ய வேண்டிய வேலைத் திட்டங்களை இனம் காணும் பொருட்டு அண்மையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. (க-35)

# லஞ்சம் பெற்ற இரு பொலிஸார் சிக்கினர்

(கொழும்பு)

மாத்தறைப் பகுதியில் லஞ்சம் பெற்றதாகக் குற்றம் சாட்டப்படும் இரண்டு பொலிஸ் உத்தியோகர்த்தர்கள் லஞ்ச ஊழல் மோசடி குற்றத்தடுப்பு ஆணைக்குழுவிடம சிக்கியுள்ளனர்.

பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட மணல் லொறி ஒன்றினை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்காமல் லொறிச் சாரதியிடம் இருந்து 3 ஆயிரம் ரூபாவினை லஞ்சமாக இவர்கள் பெற்றுள்ளனர்.

அத்துடன், சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்த ஒருவரிடம் 5 ஆயிரம் ரூபாவினை லஞ்சமாகக் கோரி அதில் 3 ஆயிரம் ரூபாவினைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இவ் இரண்டு சம்பங்களிலும் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகர்த்தர் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-8)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ரலன்ற் பாலர் கல்விச்சோலையின் மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ரலன்ற் கல்வி நிறுவன வளாகத்தில் நிறுவனத்தின் சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் ஐ.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.


இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் வே.குலநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் ந.இன்பன், வடமராட்சி மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் ந.அன்பு மற்றும் வடமராட்சி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு. பிரியன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி ஊற்று நிறுவன செயலாளர் பொ.விக்னேஸ்வரன் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் மற்றும் சுகாதார பரிசோதகர் பா.பாலதேவா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-101)

# அலங்கார உற்சவம்

(மருதங்கேணி)

மந்திகை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும். அடுத்தமாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூரத்திலன்று தீர்த்த உற்சவம் நடைபெறும்.(க-35)



தேசிய சேமிப்புவங்கியால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள நெகிழ்வான நிலையான சிறப்பு சேமிப்புக்கணக்கு ஆரம்பவிழாவைப் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் சுவாமி சித்ரூபானந்தா ஆரம்பித்து வைப்பதையும் வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தம். வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களையும் படத்தில் காணலாம்.

(பரு.நிருபர்)

## இன்று ஒரு தகவல்

# தொண்டு

ஒரே ஒரு ஊரில் ஒரு பாதிரியார் இருந்தார். நீண்ட நாட்கள் சந்தோஷமாக வாழ்ந்தார். ஒருநாள் அவர் மடத்தின் சமையல் அறையில் பாத்திரங்களைக் கழுவி துலக்கி சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். அந்த சமயத் தில் ஒரு தேவதூதுன் அவர் முன்பு வந்து நின்றான். இவர் நிமிர்ந்து பார்த்தார். ''ஆண்டவர் என்னை உங்களிடம் அனுப்பியிருக்கிறார். பரலோகத்தில் வாசம் செய்வதற்கு உங்களுக்கு நேரம் வந்துவிட்டது'' என்றான் அந்த ஆள்.

''ஆண்டவருக்கு எனது ஞாபகம் வந்ததற்கு நன்றி. ஆனாலும் இப்போது இங்கே நீயே பார்... எவ்வளவு பாத்திரங்கள் இருக்கிறது. இவ்வளவையும் நான் சுத்தப்படுத்த வேண்டியிருக்கிறது! நான் நன்றி கெட்டவனாக இருகக விரும்பவில்லை. இந்தப் பணியை முடிக்கும் வரையில் என் பரலோக வாழ்வை தள்ளி வைக்க முடி யுமா? நீ என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டார். தேவ தூதன் தனக்கேயுரிய விவேகத்துடன் பாதிரியாரை அன்புடன் பார்த்தான். "சரி... என்ன செய்யலாம் என் பதை பின்பு கூறுகிறேன்'' என்று கூறிவிட்டுப் போய் விட்டான்.

ஒருநாள் அந்தப் பாதிரியார் தோட்டத்தில் உள்ள களைகளை ஒரு களைக் கொத்தியால் கொத்திக் கொண்டிருந்தார். இந்த சமயத்தில் தேவதூதன் மீண்டும் அவர் முன் வந்து நின்றான். பாதிரியார் பார்த்தார். "இதோ பார்! இந்தத் தோட்டம் பாவம். எவ்வளவு களைகள் மண்டிக் கிடக்கிறது? பரலோகம் கொஞ்சக்காலம எனக்காகப் பொறுத்திருக்கலாம் என்று நீ நினைக்கிறாயா?'' என்று கேட்டார்.

தேவதூதன் சிரித்துக்கொண்டே மறுபடியும் மறைந்து விட்டான். மறுபடியும் அவர் களையெடுத்தல்... தானியக் களஞ்சியத்திற்கு வர்ணம் பூசுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டார். இன்னொரு நாள் ஒரு மதுத்துவமனையில் நோயாளிகளைக் கவனிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார் அந்தப் பாதிரியார். ஒரு நோயாளியின் தாகத்திற்கு தண்ணீர் கொடுத்துவிட்டு நிமிர்ந்து பார்க்கும் போது தேவதூதன் மறுபடியும் அவர் முன்பு தோன்றினான்.

இந்த முறை பாதிரியார் தன்னலமற்றவராக... பேரன் பைக் காட்டக் கூடியவகையில... தன்னுடைய இரு கை களையும் உயர்த்தியபடி... தேவதூதனின் கவனத்தை பிணியால் வாடக்கூடிய நோயாளிகளின் பக்கம் திருப் பினார். தேவதூதன் ஒன்றும் சொல்லவில்லை மறைந்து விட்டான்.

பாதிரியார் மடத்தில் உள்ள தன்னுடைய அறைக்குப் போய் இளைப்பாறினார். யோசித்துப் பார்த்தார். தேவதூதனையும் தேவதூதனின் விருப்பத்தை பலநாள் தள்ளிப் போட்டுக்கொண்டு வந்ததையும் நினைத்துப் பார்த்தார். திடீரென்று தான் முதுமையடைவதையும் சோர்வடைவதையும உணர்ந்தார். ஆண்டவரை நினைத்தார். "ஆண்டவரே! உம்முடைய தூதனை மறுபடியும் என்னிடம் அனுப்பினால் நான் சந்திப்பதற்கு ஆவலாக இருக்கிறேன்'' என்று கூறும்போதே தேவ்தூதன் பக்கத்தில் வந்து நின்றான். பாதிரியார் நிமிர்ந்து பார்த்தார். "நீ இப்போதே என்னை அழைத்துக்கொண்டு போக விரும்பினால் நான் பரலோகத்திற்கு வரத் தயாராக இருக்கிறேன்'' என்றார். தேவதூதன்... அந்தப் பாதிரியாரை அன்புடனும் விவேகத்துடனும் பார்த்து "நீங் கள் இதுவரைக்கும் வேறு எங்கே இருந்ததாக நினைக்கி றீர்கள்?'' என்றான்.

பரலோகம் என்றால் என்னவென்று புரிந்துகொள்வ தற்கு இந்தச் சம்பவம் நமக்கு உதவியாக இருக்கிறது. தொண்டு செய்வதை விடப் பெரிய செயல் வேறு எதுவும் இருகக முடியாது. அது நமது மனதிற்கு கொடுக்கும் சுகததை வேறு எதுவும் கொடுக்க முடியாது. ஆனால் இந்தக் காலத்தில் எல்லாம் நாம் தொண்டு செய்ய வேண்டும் என்று நினைத்து ஆரம்பித்தால் கூட அதை ஒரு மாதிரியாக சுற்றி நின்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிடுகிறார்கள் சார்.

ஒரு பெரியவர் அப்படித்தான் ஒரு தொண்டு செய்து கொண்டிருந்தார். ஒரு கோவில் கட்டிக்கொண்டிருந்தார்கள். அதில் ஒரு பலகையை வைத்து ஆணி அடிக்கும் வேலையைச் செயது கொண்டிருந்தா இந்தப் பெரியவர். ஒரு சிறுபையன் அதை மிகவும் ஊக்கமாகக் கவனித்துக் கொண்டிருந்தான். பெரியவா இதைப் பார்த்தார். "என்ன பார்க்கிறாய்? உனக்கும் இது போல் தொண்டு செய்ய வேண்டுமென்று ஆசையாக இருக்கிறதா?'' என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பையன் "அப்படி இல்லை! நீங்கள் ஆணி அடிககும்போது கையில் சுத்தியலால் அடித்துக்கொண்டால் என்ன செய்வீகள் என்று தெரிந்து கொள்வதற்கு நிற்கிறேன்'' என்கிறான் சார்.

## புலிகள்-முஸ்லிம் சம்மேளனப் பிரதிநிதிகள்
## கொக்கட்டிச்சோலை, அம்பாறையில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அரசியல் துறையினருக்கும் முஸ்லிம் சம்மேளனப் பிரதிநிதிகளுக்குமிடையில் கொக்கட்டிச்சோலையில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின் போது காணிக் குடியிருப்புகள் சம்பந்தமான விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. இதனடிப்படையில் இதற்கென காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேசங்களுக்கு தனித்தனிக் குழுக்களை அமைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுக்களில் முஸ்லிம் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் சார்பில் 3 பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளும் பங்கேற்பது என முடிவு எடுக்கப்பட்டது.

அன்றைய சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் மட்டு மாவட்ட அரசியல்துறைப பொறுப்பாளர் இளந்திரையன், கலாசார பண்பாட்டுக் குழுத் தலைவர் ஆயதாஸ் ஆகியோரும் பள்ளிவாசல் சம்மேளனத்தின சார்பில் அதன் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, அம்பாறையிலும் முஸ்லிம்களுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இச்சந்திப்பின் போது தமிழ்,முஸ்லிம் நல்லுறவைத் தொடர்ந்து பேணுவதென்றும், எத்தகைய பிரச்சினைகள் வந்தாலும் அதனைப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்ப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், இவ்வாறான சந்திப்புக்களை அடிக்கடி நடத்துவது என்றும், கடந்த காலத்தில் இவ்வாறான சந்திபபுக்களில் ஏற்பட்ட தீர்மானத்தை நடைமுறைப் படுததுவது என்றும் அன்றைய சந்திப்பில் முடிவு எடுக்கப்பட்டது.

அன்றைய சந்திப்பில் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், அம்பாறை மாவட்ட கட்டளைத்தளபதி ராம், படையணித் தளபதி ஜனார்த்தனன் ஆகியோரும் முஸ்லிம் பிரதிநிதிகள் சார்பில அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல் ஒன்றியத் தலைவர் சனீப் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

முதல் தடவையாக இச்சந்திப்பு புலிகளின் கட்டுப்பாட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் உள்ள மாவட்ட அரசியலதுறை அலுவலகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

## இவ்வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும்
### எல்லாவல மேதானந்த தேரர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு முடிவடைவதறகுள் நடத்தப்படவேண்டும் என ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பிலியந்த நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதியின் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது. ஆகவே அரசியல் அமைப்பின்படி டிசம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்று இவ்வருடம் முடிவடைவதற்குள் நடாத்தப்படவேண்டும். டிசம்பர் மாதத்துடன் ஜனாதிபதியின பதவிக்காலம் முடிவடைகின்றது. எனினும் ஊடகங்களின் கூற்றின் அடிப்படையில் அடுத்த ஆண்டே ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என பிரசாரம் போல் கூறப்படுகின்றது.

இது நாட்டின் சட்டத்திற்கு முரணான செயற்பாடாகும். இந்த நாட்டுடனும் மக்களுடனும் சடடததுடனும் விளையாடக்கூடாது. அதனால் இந்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என கூறுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ந-8,9)

## ரணிலின் நடவடிக்கைகளால் அரசியல் அமைப்புச்சபை செயலிழப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகள் காரணமாக அரசியல் அமைப்புச் சபை செயலிழந்துள்ளதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அரசியல் அமைப்புச் சபைக்கு 5 உறுப்பினர்களை பரிந்துரை செய்யவேண்டியது எதிர்க்கட்சித்தலைவரின கடமையாகும். எனினும் இது தொடர்பில் அவர் தமது பொறுப்பினை நிறைவேற்றவில்லை என்று அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

பிரதம மந்திரி ஏற்கனவே அரசியல் அமைப்புச் சபைக்காக தமது தரப்பினரான 5 பேரை பரிந்துரை செய்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் இந்தக் குற்றச் சாட்டுக் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தமது மறுப்பை வெளியிட்டுள்ளது.


நாடாளுமன்ற உறுப்பினர். ஜீஎல். பீரிஸ் இது தொடர்பாகக கருத்துரைக்கையில், அரசியல் அமைப்பின 17வது சரத்தின் கீழ் நாட்டிற்கு அவசியமான ஒன்றாகக் கருதப்படும் சுயாதீன தேர்தல் சபைக்கு இதுவரை ஜனாதிபதி பிரதிநிதி ஒருவரை நியமிக்கவில்லை.

இந்த நிலையில் அரசியல் அமைப்பு சபைக்கு எதிர்க்கட்சித் தலைவர் பிரதிநிதிகளை நியமிக்கவில்லை என்று குற்றம் சுமத்துவதற்கு அரசாங்கத்திற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்று ஜீ.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## கற்பித்தல் சாதன உருவாக்கல் போட்டி









(யாழ்ப்பாணம்)

கற்றல் கற்பித்தல் தர உள்ளீட்டு மூலவள நிலையம் இலங்கை வங்கியின் அனுசரணையுடன் நடாத்தும ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கல் போட்டி நேற்று யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் உலகநாதனும் கலந்துகொண்டனர்.

மேலும், இந்நிகழ்வில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் மேலதிக பீடாதிபதி யோகநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் முகிழ்நிலை ஆசிரியர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் ஆசிரியர்களால் உருவாக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்ட கற்பித்தல் சாதனங்களை

# ஈராக்கில் இடம்பெற்ற மோதல்களில் 2 ஆண்டுகளில் 25,000 பொதுமக்கள் பலி!

(பக்தாத்)

ஈராக் நாட்டுக்குள் 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்க படைகள் புகுந்து தாக்குதல் நடத்தி ஈராக் முழுவதையும் கைப்பற்றின. அதிலிருந்து அமெரிக்க இராணுவம - தீவிரவாதிகள் இடையே மோதல்கள் நடந்து வருகின்றன. இந்த மோதலில் அப்பாவி மக்கள சிக்கி உயிரிழக்கின்றனர்.

இவ்வாறான தாக்குதலில் கடந்த 2 ஆணடில் மட்டும் 24 ஆயிரத்து 865 அப்பாவி மக்கள் பலியாகியுள்ளனர். இதில் 3இல் ஒருவர் அமெரிக்கப் படைத்தாக்குதலால் கொல்லப்பட்டவர்களாவர்.

பலியான அப்பாவி மக்களில் பாதிப்பேர் பக்தாத நகரைச் சேர்ந்தவர்கள். அதற்கு அடுத்தபடியாக பலுஜா நகரில் ஏராளமான அப்பாவி மக்கள் பலியாகியுள்ளனா. 25 ஆயிரம் பேர் பலியாகி இருக்கிறார்கள் என்று கூறப்பட்டாலும் 1இலட்சத்துக்கும மேற்பட்ட அப்பாவி மக்கள் பலியாகி இருபபதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள தெரிவிக்கின்றன.

ஈராக்கில் தீவிரவாதிகளைத் தேடிப் பிடித்து அழித்துவரும் அமெரிக்க இராணுவம் தீவிரவாதிகள் நடமாட்டத்தை தெரிவிப்பதற்காக இரகசிய ஏஜெண்டுகளை நியமித்துளளது. ஆனால் அவர்கள் தவறான தகவல்களைக் கொடுத்து விடுகின்றனர். அந்தத தகவலை நம்பி அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தும் போது அதில் அப்பாவி மக்கள சிக்கி பலியாகிவிடுகின்றனர்.

அமெரிக்காவின் தாக்குதலில் முதல் ஆண்டை விட 2ஆவது ஆண்டில் பலியானோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



சீனாவில் லான்சூவின் பாட்டு மற்றும் நடனக்குழு தன்னுடைய திறமையை இப்படி வெளிப்படுத்தி மக்களை ஆச்சரியப் படுத்தியது.

# பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை தீவிரவாதிகள் கைப்பற்றும் அபாயம்

## பிரதமர் மன்மோகன் சிங் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் 4 நாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுமுன்தினமிரவு சி.என்.என் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்தார்.

அவர் கூறியதவாது,

பின்லேடன் தலைமையிலான அல்-கெய்டா தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தானில் வலுவான தளம் உள்ளது. அந்த நாட்டில் இருந்துதான் அவர்கள் செயல்படுகிறார்கள்.

இஸ்லாமிய தீவிரவாதிகள் பாகிஸ்தானில ஆட்சியைக் கைப்பற்றும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால், பாகஸ்தான் தயாரித்து வைத்துளள அணு ஆயுதங்கள் அனைத்தும் முஸ்லிம் தீவிரவாதிகளின் கடடுப்பாடடுக்குள் போய்விடும். இது அபாயகரமானது.

பாகிஸ்தானில் உள்ள சூழ்நிலை கவலை அளிப்பதாக உள்ளது. எனவே, அதிபர் பர்வேஷ முஷாரப், பாகிஸ்தானில் உள்ள அணு ஆயுதங்களை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும். இதுவே இதற்கு நல்ல தீர்வு ஏற்படும் என்று நம்புகிறேன்:

முஸ்லிம் தீவிரவாதிகள் கையில் அணு ஆயுதங்கள் சிக்கிவிட்டால் அவற்றை அவர்கள் தவறான நோக்கத்துக்காகப் பயன் படுத்த நேரிடும். அது போன்று நடக்காது என்று நம்புகிறேன். நடக்கக்கூடாது என்று கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன்.

பாகிஸ்தானில் இருந்து செயல்படும் தீவிரவாதிகள் எப்போதுமே ஆபத்தானவர்கள்தான். அவர்களை பாகிஸ்தான் ஒடுக்க வேண்டும். பாகிஸ்தானில் நிலையான ஆட்சியும் மேம்பாடும் ஏற்படவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். பாகிஸ்தானில் பின்லேடனும், அவனது இயக்கமும் வலுவாக உள்ளதில எந்தவித சந்தேகமும் இல்லை. எனவே நாங்கள் முன் எச்சரிக்கை ஏற்பாடுகளுடன் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தவே இந்தியா விரும்புகிறது. ஆனால் அதற்கு முன்னதாக தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவுவதை பாகிஸ்தான் தடுத்து நிறுத்தவேண்டும்.

முஷாரப்பை நான் நம்புகிறேன். ஆனால் நம்பும்போது சோதிக்கவும் வேண்டும் என்று ரீகன் கூறியுள்ளார்.

தவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் எடுத்துவரும் நடவடிக்கைகளை நான் நம்புகிறேன். இவ்வாறு பிரதமர் மன்மோகன்சிங் கூறினார். (ற)



'அன்பே ஆருயிரே' படத்தின் பாடல கசட்டை இசைப் புயல் ஏ.ஆர்.ரகுமான் வெளியிட நடிகர் விஜய் பெற்றுக்கொண்டார். அருகில் டைரக்டா எஸ்.ஜே.சூர்யா, வால', பட அதிபர் எஸ்.எஸ்.சக்கரவர்ததி ஆகியோர் உள்ளனர்.

## மீண்டும் தாக்குதல் திட்டம்;

# இலண்டனில் பதுங்கியுள்ள தற்கொலையாளி

(இலண்டன்)

இலண்டனில் கடந்த 7ஆம் திகதி தொடர் குண்டுவெடிப்பு நடந்தது. இதில் 50க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதில் 4 மனித வெடிகுண்டுத் தீவிரவாதிகள் சம்பந்தப்படடிருப்பது தெரியவந்தது.

எனவே, மேலும் யாரும் தீவிரவாதிகள் இலண்டனில் பதுங்கி இருப்பார்களா? என பொலிஸார் சல்லடை போட்டு தேடி வருகிறாகள். இந்தநிலையில் மேலும் ஒரு மனித வெடிகுண்டு இலண்டனில் நடமாடுவதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

அத்தீவிரவாதி மீண்டும் தாக்குதல் நடத்த திட்டமிட்டு சுற்றுவதாகத் தெரிகிறது. எனவே, பொலிஸார் அவனைப் பிடிக்க கடும் சோதனை நடத்தி வருகிறார்கள்.


மீண்டும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்பதால் மக்களிடம உச்சக்கட்ட பீதி நிலவுகிறது. ரயில் மற்றும் பஸ்களில் கூட்டம் குறைவாகவே உள்ளது. கடை வீதிகளில் மக்கள் நடமாட்டமே இலலை. ரயில மறறும் பஸ்களில் பயணம் செய்தவர்கள் இப்போது சொந்தக் கார் அல்லது சைக்கிளில் தான் பயணம் செய்கிறார்கள். இதனால் அங்கு சைக்கிள் விற்பனை சூடுபிடித்துள்ளது.

கடை வீதிகளில் மக்கள் நடமாட்டம குறைவாக இருப்பதால் கடைகளில் வியாபாரம் இல்லை. எனவே தள்ளுபடி விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தீவிரவாதிகளின் தாக்குதலுககுப் பயந்து நகரங்களில் வசிக்கும் மக்கள் சிலர் கிராமப் பகுதிகள் மறறும் பாதுகாப்பான இடத்துக்கு குடிபெயர்ந்து வருகின்றனர்.

இதற்கிடையே இங்கிலாந்துப் பிரதமர் டொனிபிளேயர் முஸ்லிம் தலைவர்களை அழைத்து விவாதித்தார். இந்தக் கூட்டத்துக்குப் பிறகும கூட ஈராக் விஷயத்தில இங்கிலாந்து கடைப்பிடிக்கும் கொள்கையை இங்கிலாந்து முஸ்லிம்கள் விமர்சித்து வருகின்றனர்.

அங்குள்ள முஸ்லிம் மதத் தலைவரான உமர் பக்ரி கூறும்போது, ரொனிபிளேயரின ஈராக் கொள்கை சரியானது அல்ல். அவரை நக்கிவிட்டு மக்கள் வேறு ஒருவரை பிரதமராகத் தேர்வு செய்யவேண்டும் என்றார். இது தீவிரவாதிகள் தாக்குதலை நியாயப்படுத்துவது போல் உள்ளது என்று இங்கிலாந்து மக்கள சிலர் குறை கூறியுள்ளனர். (ற)

உலக தரிசனம்



அமெரிக்காவின் கேப்கனவராலில் உள்ள கென்னடி விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிருபர்கள் சந்திப்பில் டிஸ்கவரி விண்வெளி ஓட திட்ட மேலாளர் பில் பார்சன்ஸ், துணை இயக்குநர் வேய்ன் ஹேல் ஆகியோர் விளக்கமளிக்கின்றனர்.

# 3 தசாப்த கால போருக்கு ஓய்வு

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் உள்ள ஏக் பகுதியில்தனி நாடு கேட்டு தீவிரவாதிகள் போராடி வந்தனர். 30 ஆண்டுகளாக இந்தப் போராட்டம் நடந்து வந்தது. இதில் 15ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். அவர்களை ஒடுக்குவதற்காக இந்தோனேஷிய இராணுவம் அங்கு முகாமிட்டிருந்தது.

இரு தரப்புக்கும் இடையே அடிக்கடி மோதல் நடந்து வந்தது.

இந்தநிலையில் அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்து வந்தது. இதில் சுமூக முடிவு எடுககப்பட்டுள்ளது. இதையடுத்து ஏக் பகுதியில் இருந்த இந்தோனேஷியப் படைகள் வாபஸ் ஆகின்றன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் படை வாபஸ் தொடங்கும என்று இந்தோனேஷிய அரசு அறிவித்துள்ளது. இதனால் 30 ஆணடுகால போா முடிவுக்கு வந்துள்ளது. (ற)

# பறவைக் காய்ச்சலுக்கு முதல் பலி! உறுதி செய்தது இந்தோனேஷியா

(ஜகார்த்தா)

பறவைக் காய்ச்சல் நோய்க்கு முதல் மனித பலியை உறுதிப்படுத்தியது இந்தோனேஷிய அரசு.

தலைநகர் ஜகார்த்தாவுக்கு தென்மேற்கில் உள்ள தாங்கராவ் மாவட்டததைச் சேர்ந்த 38 வயதாகும் இவான் சிஸ்வாரா ரபேல், அவருடைய 9 மற்றும் ஒரு வயது மகள்கள் மூவரும் பறவைக் காய்ச்சல் நோயால் உயிரிழந்தது பரிசோதனைகள் மூலம் உறுதி செய்யப்படடுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் சிதிபதிலா சுபாரி தெரிவித்துள்ளார்.

ஜுலை முதல் வாரத்தில் இவர்கள் இறந்தனர். ஹொங்கொங்கில் மேற்கொளளப்பட்ட பரிசோதனையில் இம் மூவரும் பறவைக் காய்ச்சலால் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

ரபேலின் மனைவி உட்பட அவர்களுடன் தொடர்புடைய 300க்கும் மேற்பட்டோரிடம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுக்கு இந்நோய்த்தொற்று இல்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது எனறார் சுபாரி. (ற)

# ஐரோப்பிய நாடுகளுக்கு அல் - கெய்டா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ஈராக்கில் இருந்து தங்களது படைகளை ஒரு மாதத்திற்குள் திரும்பப் பெறாவிட்டால் இலண்டனில் நடந்தது போன்ற வெடிகுண்டுத தாக்குதல்களை உங்கள் நாடுகளிலும் நடத்துவோம் என ஐரோப்பிய நாடுகளுக்கு அல் - கெய்டா அமைப்பு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அல் - கெய்டாவின் ஐரோப்பியப் பிரிவு ஒரு இணையத்தளம் மூலமாக இந்த எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஈராக்கிலிருந்து உங்கள் நாட்டு வீரர்களை ஒரு மாதத்திற்குள் திரும்பப் பெற ஒரு மாதம் மட்டுமே கெடு விதிப்பதாகவும், இல்லையென்றால் தாக்குதல்களை அரங்கேற்றுவோம எனவும் அந்த இணையத்தளமூடாக விடுக்கப்பட்ட எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 60



இக் குடிலை திரு.பிரம்மசாரி ராமஸ்சுவாமி அடிகளார் நடாத்துகின்றார். நான் திருச்சிக்குச் சென்றால் மரக்கடை திரு.ஆ. பொன்னுசாமிப்பிள்ளை வீட்டில் தங்குவேன்.

குடில் சுவாமிகள் அங்கு வந்து என்னைக்கண்டு குடிலைப் பற்றி நிரம்பக் கூறினார். நான் குடிலுக்குச் சென்று சுற்றிப் பார்த்து அதன் தூய்மையையும், அத் தொண்டின் உயர்வையும் எண்ணி உள்ளம் உருகினேன். அன்றிலிருந்து என்னாலாகிய உதவிகளைக் குடிலுக்குச் செய்யலானேன்.

பாண்டிச்சேரியில் பத்துநாள் குடிலுக்காக விரிவுரை செய்தேன். அப்பொழுது பாண்டிச்சேரியில் வெங்கடசுப்பாரெட்டியார் முதலமைச்சராக இருந்தார். நீதிபதி மகராஜப்பிள்ளை, ஐ.ஜி.பொன் பரமகுரு முதலியோர் அங்கிருந்து உதவி செய்தார்கள். குடிலுக்கு அறுபதினாயிரம் ரூபாய் வசூலாயிற்று.

திருச்சியில் 20நாள் மகாபாரத விரிவுரை செய்து வீடு தோறும், கடைதோறும் அலைந்து திரிந்து ஒரு லட்சரூபாய் வசூலித்து குடிலுக்குத் தந்தேன்.

குடில் சுவாமிகளும், நானும் இப்படியே ஆண்டுதோறும் எத்தனை காலம் வசூலிப்பது? என்று கருதினோம். ஒரு குழந்தைக்கு நிரந்தர நிதியாக 5000என்று திட்டமிட்டு ஒரு பெருந்தொகை சேர்த்து பாங்கில போட்டுவிட்டால், குடில் என்றும் பிறா உதவியை நாடாமல் தன் காலில் நின்று இயங்கும் என்று திட்டமிட்டோம்.

குடில் சுவாமிகளும், நானும் தமிழகம் முழுவதும் சுற்றி நிரந்தர நிதி திரட்டினோம். குடில் வெற்றி விழா 1976இல் நடைபெற்றது. அந்த வெள்ளிவிழாவின்போது எங்கள் திட்டம் பூர்த்தியாயிற்று.

27 லட்சம் சேர்த்து குடிலுக்கு வைப்பு நிதியாக வைக்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள தனம், மனம் படைத்த அன்பர்கள் இந்த வைப்பு நிதிக்குப் பெரிதும் உதவி செய்தார்கள்.

குடில் சுவாமிகள் பிரம்மசாரி ராமசாமி பரமசாது. திருத்தொண்டின் சிகரம். வாய்மையும், தூய்மையும் படைத்தவர். அயர்ச்சி இல்லாத முயற்சி உடையவர். உள்ளத்தில் ஈரமும், செயலில் வீரமும் படைத்தவர். திக்கற்ற 360குழந்தைகளுக்குத் தாயும், தந்தையுமாக இருந்து, அவர்களுக்கு உணவு தந்து உடம்மையும், கல்வி நலம் தந்து உணர்வையும் வளர்த்து வருகின்றார். இக்குடிலின் சிறப்பு இமயம் போன்றது. இதைப் பார்த்தவர்கள் பரவசம் அடைவார்கள்.

இக்குடிலின் திருத்தொண்டின் திறத்தைத் தமிழகத்தில் எல்லோரும் அறிவார்கள். தனிப்பெருந் தலைவர் காமராஜர் இக்குடிலில் பரிவுகாட்டி வந்தார். வினோபா அடிக்கல் நாட்டி ஆசி கூறினார்.

குடில் வசூலின்பொருட்டு திருப்பூரிலுள்ள ஒரு பெருந்தனவந்தரை அணுகினேன். அவர் மிகப்பெரும் தனவந்தர். நெடுங்காலமாக என்னுடன் தொடர்பு உள்ளவர். அவருக்கு ஒரே பெண். அவருடைய மாப்பிள்ளை அவரைவிடப் பெருஞ்செல்வம் படைத்தவர்.

அந்த தனவந்தர் 500 அல்லது 1000 தருவார் என்று எதிர்பார்த்தேன். அவர் என்னையும், குடில் சுவாமிகளையும் பார்த்து முகத்தைச் சுளித்துக்கொண்டார். "எனக்கு மிகுந்த சிரமம்; நான் அல்லல்படுகின்றேன். ஆதலால் குடிலுக்கு ஒன்றும் தரஇயலாது" என்றார்.

எழுபது வயதுள்ள அவர் இன்னும் எத்தனைக்காலம் இருக்கப் போகின்றார்! ஆண் சந்ததியும் இல்லை. இவர் கஞ்சத் தனமாகப் பஞ்சப்பாடல் பாடுகின்றாரே! என்று எனக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. வருத்தத்தின் மிகுதியினால் அடியிற் கண்டவாறு வசனித்தேன்.

"செட்டியார்! நீங்கள் என்னுடைய ஆப்த நண்பர், நீங்கள் சிரமப்படக்கூடாது. உங்களுடைய துயரத்தைத் துடைப்பது என்னுடைய கடமை. நான் மாதந்தோறும் பல வறியவர்களுக்கு நியதியாகப் பண உதவி செய்கின்றேன். அந்த வரிசையில் தங்கள் பெயரையும் எழுதி வைத்துக் கொண்டு மாதந்தோறும் தங்களுக்கு உதவி செய்வேன். என் நண்பராகிய தாங்கள் அல்லல் படவேண்டாம்'' என்றேன்.

பெருஞ் செல்வராகிய அவருக்கு முகம் சுருங்கிவிட்டது. அவர் என்னைப் பார்த்து "தாங்கள் எனக்கு உதவி செய்வதா? ம்...ம்...ம்..." என்று கூறி என்னிடம் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்தார்.

நான் மறுபடியும் அவரைப் பார்த்து "தாங்கள் வருந்த வேண்டாம். நான் தவறாமல் மாதந்தோறும் தங்களுக்குப் பணம் அனுப்பி உதவி செய்வேன்" என்று ஒரு போடுபோட்டேன். எத்தனை சொல்லியும் அவர் பணம் தந்தாரில்லை. நாங்கள் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டோம். சிறிது காலத்திற்குப் பின் அவர் இறந்தே போய்விட்டார்.

தனமிருந்தும் மனமில்லாத பலர் இவ்வாறு இருக்கிறார்கள். குடிலுக்குக் கேளாமல் கொடுத்தவர்கள் பலர் உண்டு. மேட்டூர் அணை பொறியியல் அலுவலர் சங்கரநாராயணன் பாண்டிச்சேரி என்னுடைய அபிமானப் புதல்வி ஜெயாலூர்து, செட்டிக்குளம் பச்சைமுத்து முதலிய அன்பர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. குடிலுக்கு உதவி செய்த அன்பர்களுக்கு வயலூர் வள்ளல் பெருமானுடைய திருவருள் துணைசெய்ய வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

### நேபாள யாத்திரை

#### தில்லைத் திருப்புகழ் சபையாருடன்

முன்னொரு சமயம் கலகத்தாவிற்கு விரிவுரை செய்யும்பொருட்டுச் சென்றிருந்தேன். கல்கத்தா என் உழுவலன்பர் திரு.வி.ஏ.பி.ஐயர் அவர்களின் ஏற்பாட்டின்படி நேபாளம் சென்றேன். அப்பொழுது அம்பா சமுத்திரத்து அன்பர்களும், என் தமையனார் மறைஞானசிவம் அவர்களும் அந்த யாத்திரையில் கலந்து நேபாளம் பசுபதிநாதரைத் தரிசித்தார்கள்.

தில்லைத் திருப்புகழ்ச் சபையன்பர்கள் நேபாள யாத்திரைசெய்ய விரும்பி என்னை உடன் வருமாறு அழைத்தார்கள். சிதம்பரம் "நற்குண நம்பி" R.பாலசுப்பிரமணியம் முதலிய அன்பர்களின் வேண்டுகோளுக்காக இந்த யாத்திரைக்கு இசைந்தேன்.

மதுரை நாராயணா டிராவல்ஸ் ஏஜன்ஸி அதிபர் திரு. முத்து ஸ்வாமி ஐயர் யாத்திரை செய்விப்பதில் வல்லவர்; நல்லவர். இவர் மூலம் யாத்திரையை ஒழுங்கு செய்தேன். இரண்டு பெட்டிகளில் 115பேர் என்னுடன் யாத்திரை செய்தார்கள். 16-7-74இல் இந்த யாத்திரை தொடங்கியது. 26-8-74இல் யாத்திரை முற்றுப் பெற்றது. 30 தலங்கள் தரிசிக்கப்பட்டது. நேபாளத்தில் பசுபதிநாதரைத் தரிசித்துப் புனிதமடைந்தோம்.

### சிரோன்மணி

நான் நேபாளத்தில் தங்கியிருந்த பொழுது என்னுடைய ஆப்த நண்பர் திரு.வி.ஏ.பி.ஐயர் "ஒரு மகானைப் பார்க்கலாம் வாருங்கள்'' என்றுகூறி என்னை அழைத்துக்கொண்டு சென்றார். அந்த வழி கார் போகமுடியாத கொடிய தடம். ஆதலினால் ஜீப்பில் அழைத்துக்கொண்டு சென்றார். 40 மைல்களுக்கப்பால் மலைச்சாரல். ஒரு சிறு நதி ஓடிக்கொண்டிருந்தது. சிறிய சிறிய பத்து, பதினைந்து கோயில்கள் இருந்தன. அங்கு ஒரு மடத்தில் ஒரு மகான் இருந்தார். அவரை வணங்கினேன். நீண்டநேரம் வேதாந்த விஷயமாக உரையாடினேன். பொழுது போய்விட்டது. நான் அவரைப்பார்த்து "சுவாமி! கண்டகி நதியில் சாளக்கிராமங்கள் கிடைக்கின்றன என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். எனக்கு சாளக்கிராமம் வேண்டும். கண்டகி நதிக்குப் போக வழியாது?'' என்று கேட்டேன்.

(தொடரும்)

## மேஜர் முத்தலிப் படுகொலை;

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி சுயாதீன விசாரணைக்குப் பொறுப்பேற்பு

சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் முத்தலிப்பின் கொலைதொர்டர்பாக சுயாதீன விசாரணையை நடத்துவதற்கான பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொள்வதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொலை தொடர்பில் இதுவரை நடைபெற்ற விசாரணைகள் தொடர்பான தகவல்களை வெளியிடமுடியாதென்று தெரிவித்த ரட்ணசிறி விக்கிரமநாயக்க முத்தலிப்பின் படுகொலையை கூட்டமைப்பு அரசு கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ற-8)

## ஒருவருட காலத்திற்குள்

## குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தியமைக்கு பொலிஸாருக்கு ஜனாதிபதி பாராட்டு

கடந்த வருட காலத்தில் நாட்டில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தியமைக்காக பொலிஸாருக்கு ஜனாதிபதி பாராட்டுதல்களை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒருவருட காலப்பகுதியில் தற்போதைய பொலிஸ்மா அதிபரின் கீழ் பொலிஸாரின் செயற்பாடுகள் குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த சில வருடங்களாக தீர்க்கப்படாமல் இருந்த பிரச்சினைகள் இந்தக் காலப்பகுதியில் சிறப்பாகத் தீர்க்கப்பட்டுள்ளன. இதனால் பொலிஸார் மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர் எனவும் ஜனாதிபதி தனது பாராட்டுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ற-8)

## சகல இனத்திற்கும் சமவுரிமை உண்டு

### -அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண

(கொழும்பு)

இலங்கையில் வாழும் அனைவருக்கும் சம உரிமை இருப்பதாக தபால் தொலைத்தொடர்புகள் மலையக அபிவிருத்தி அமைச்சர் டி. எம்.ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

அனைவரும் ஏனைய மதங்களையும் இனங்களையும் கௌரவமாக மதிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் சபாநாயகர் பார்க்கீர் மாக்காரின் ஞாபகார்த்த முத்திரை ஒன்றை வெளியிட்டு வைக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டு மக்கள் அச்சமும் சந்தேகமும் இன்றி வளர்ச்சியை நோக்கிச்செல்ல வேண்டுமாயின் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வது அத்தியாவசியமானது. அவ்வாறு இல்லையாயின் எந்தவொரு இனத்தையும் கரைசேர்க்க முடியாததாக இருக்கும். இலங்கையில் வாழும் சகல குடும்பங்களுக்கும் இனங்களுக்கும் சமமான உரிமை இருக்கின்றது. அனைவரினதும் தேவைகளும் நியாயமான அடிப்படையில் பூர்த்திசெய்யப்படுவதுடன் அவை பகிரப்படுவதும் அத்தியாவசியமானது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

## பேருந்திலிருந்து தோட்டாக்கள் மீட்பு

## புத்தளத்தில் சம்பவம்

(புத்தளம்)

புத்தளம் பேருந்து ஒன்றிலிருந்து தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

புத்தளத்திலிருந்து எழுவன்குளம் நோக்கி பயணமான பேருந்திலிருந்து ரி-56ரக தோட்டாக்கள் நாற்பதையும் எம்.எம்.40ரக ரொக்கட் லோஞ்சர் தோட்டா ஒன்றையும் புத்தளம் காவல்துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளம் எழுவன்குளம் 6ஆம் மைல் கல்லில் இருக்கும் சோதனைச்சாவடியில் இந்த பேருந்தை நிறுத்தி சோதனையிட்டபோது பின்புறத்தில் கைவிடப்பட்ட நிலையிலிருந்த பெட்டியொன்றிலிருந்து இந்தத் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் பெட்டிக்கு உரிமையாளர் யாரும் இல்லாத நிலையில் பேருந்து சாரதியும் நடத்துனரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சாரதி தமிழர் என்றும் நடத்துனர் முஸ்லிம் இனத்தவர் என்றும் தெரியவருகிறது. (ற)

## விரைவில் வவுனியாவில் மாபெரும் எழுச்சி நிகழ்வு

(வவுனியா)

தமிழரின் உரிமைகளை சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வவுனியாவில் மாபெரும் எழுச்சி நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இவ் எழுச்சி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிற்பகல் 4.00மணிக்கு வவுனியா மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெற்றது.

இதில் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை ஆகியோர் உட்பட வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். (ற)

## குரங்குகளால் அச்சம்

மந்திகை பகுதியில் குரங்கின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மந்திகை அரசினர் வைத்தியசாலை வளாகம் மற்றும் மந்திகை அம்மன் ஆலய வளவு, மந்திகை ஆலடிச்சந்தை வளாகம் ஆகிய இடங்களில் பெருமளவு குரங்குகள் திரிவதால் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் வீட்டிற்கு வெளியே வர அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-35)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை

10

பி.ஜே.ராஜய்யா

## பிணத்துடன் திருவிழா

பாக்தாத் அரண்மனை விடிந்தும் விடியாத காலைப்பொழுது, இளம் மன்னன் இரண்டாம் ஃபைசல் கண்விழித்து சோம்பல் முறித்தான்.



இளம் மன்னன் இரண்டாம் ஃபைசல்

நான்கு வயதில் மன்னனாக மகுடம் சூட்டப்பட்ட அவனுக்கு, இப்போது இருபத்துமூன்று வயதாகிறது. என்றாலும் விளையாட்டுத்தனம் மாறாத விடலைப் பையனாகவே இருந்தான். மாடர்ன் ஆர்ட், ஜாஸ் இசை என்று ஜாலியாய் பொழுதைக் கழிப்பதில் தான் அவனுக்கு ஆர்வம். அரசியல் ஈடுபாடு துளிகூட கிடையாது.

படுக்கையிலிருந்து எழுந்தவன் முகம் மழிப்பதற்காக கண்ணாடிமுன் நின்றான்.

திடீரென பீரங்கிக் குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டான். குண்டு வெடிப்புச்சத்தம் வெகு அருகாமையிலிருந்து கேட்டது...

மன்னராட்சிக்கு கட்டுப்பட மறுத்து புரட்சியைத் தொடக்கியிருக்கும் தளபதி அப்துல் கரீம் காசிமுக்கு விசுவாசமான இராணுவத்தினர் அரண்மனையைச் சுற்றி வளைத்திருப்பதை அந்தப் பீரங்கி முழக்கம் அறிவித்தது.

ஃபைசல் பதட்டத்துடன் அறைக் கதவைத் திறந்து கொண்டு மண்டபத்துக்கு ஓடி வந்தான். இரத்தம் உறைய நின்றான்.



சிறுவன் ஃபைசலுடன் தாய்மாமன் அப்துல்லா

அங்கே புரட்சி இராணுவத்தினரின் எந்திரத் துப்பாக்கிகளுக்கு முன்னாள் அவனது குடும்பத்தினர் அத்தனை பேரும் நிராயுதபாணிகளாக மண்டியிட்டிருந்தார்கள். அவர்களின் உடல் அச்சத்தில் வெடவெடத்தது.

விபரீதத்தை நொடிப்பொழுதில் உணர்ந்து கொண்ட ஃபைசல், புரட்சி இராணுவ அதிகாரியின் காலில் விழுந்து கதறினான். "என்னையும் என் குடும்பத்தையும் ஒண்ணும் பண்ணிடாதீங்க. ஆட்சியை நீங்களே எடுத்துக்கங்க. எங்களை பாதுகாப்பா வேற நாட்டுக்கு அனுப்பி வைங்க" என்று கண்ணீருடன் கெஞ்சினான்.

அவனது கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக அதிகாரி உறுதியளித்தார். அதற்குப் பிறகுதான் ஃபைசலுக்கு போன உயிர் திரும்பியது.

அதிகாரி கையில் எந்திரத் துப்பாக்கியுடன் முன்னே நடக்க, ஃபைசலும், அவனது குடும்பத்தாரும் பின்தொடர்ந்தனர்.

நாலெட்டு நடந்ததும் அதிகாரி சட்டென நின்றார். திரும்பினார். எந்திரத் துப்பாக்கியை நீட்டினார். விசையை அழுத்தினார்...

"எல்லாம் வல்ல அல்லா அருள் புரிவானாக ஈராக் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி. 1958 ஜூலை 14ஆம் திகதியாகிய இன்று ஈராக் வரலாற்றில் ஒரு பொன் நாள். எகிப்து - சிரியா இணைப்பை உடைத்தெறிய ஈராக் ஆட்சியாளர்கள் இட்ட உத்தரவை ஏற்க மறுத்து இன்று ஈராக் இராணுவத்தினர் புரட்சி செய்தார்கள். அவர்கள் ராஜகுடும்பத்தினர். வசித்து வந்த அரண்மனையைச் சுற்றி வளைத்து திடீர்த்தாக்குதல் நடத்தினார்கள்.



இரண்டு மணி நேர முற்றுகைக்குப் பின் மன்னர் இரண்டாம் ஃபைசல் மன்னரின் சார்பில் நாட்டை ஆண்டு வந்த அவரது தாயமாமன் அப்துல்லா, அப்துல்லாவின் தாய் மற்றும் சகோதரி ஆகியோர் இனப்பற்று மிக்க இராணுவத்தினரின் எந்திரத் துப்பாக்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதன் மூலம் மன்னர் ஆட்சி என்ற பீடை ஈராக்கில் இருந்து ஒழிக்கப்பட்டுவிட்டது.

இன்று முதல் ஈராக்கின் குடியரசு மலர்கிறது. இராணுவத்தளபதி அப்துல்கரீம் காசிம் ஈராக் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ளார் என்பதை இனப்பற்று மிக்க ஈராக் இராணுவத்தினர் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்".

...இராணுவ உயர் அதிகாரி அப்துல் சலாம் ஆரிஃப் வானொலியில் ஆற்றிய இந்த உரையைக் கேட்ட சதாம் இது கனவா? நனவா? என்று தடுமாறினான். பின்னர், மன்னர் ஆட்சி ஒழிந்தது என்று குதித்தான். சந்தோசம் தாங்காமல் வீட்டுக்கு வெளியே ஓடிவந்தான். அவனைப் போலவே வானொலி செய்தி கேட்ட பாக்தாத் நகரவாசிகள் உற்சாகம் பொங்க தெருவுக்கு வந்து ஆடினார்கள், பாடினார்கள்.

"துரோகிகள் ஒழிக! இராணுவம் வாழ்க!" என்று விண்ணதிர முழங்கினார்கள். "பழிக்குப்பழி வாங்குவோம்" என்று கர்ஜித்தார்கள். கும்பல் சேர்ந்தார்கள். தெருவே அடைக்கிற மாதிரி திருவிழாக்கூட்டம் போல் கிளம்பிப் போனார்கள். அவர்களுடன் சதாமும் சேர்ந்து கொண்டான்.

இத்தனை நாளும் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை அந்தக் கும்பல் தெருவில் அவிழ்த்துக்கொட்டியது. அது இங்கிலாந்து தூதரகத்தைத் தாக்கியது. உள்ளே புகுந்து சூறையாடியது. பினனர் சதாம் முன் செல்ல, அவனைப் பின் தொடர்ந்து வந்த அந்தக் கும்பல், ஹோ- வென அரண்மனைக்குள் புகுந்தது. அரசரின் பிரதிநிதியாக நாட்டை ஆண்டுவந்த அப் துல்லாவின் பிணத்தைத்தேடி எடுத்தது. குண்டு துளைத்திருந்த அந்த உடலை ஆத் திரத்துடன் அங்கம் அங்கமாக வெட்டிச் சிதைத்தது. பின்னர் அதைப் பாக்தாத் நகர தெருக்கள் வழியே எல்லோரும் பார்க்க கோபாவேசத்துடன் தரதரவென்று இழுத்துச் சென்றது. இறுதியில் கோல்டன் சதுக்கம் வந்தடைந்தது. அப்போது அப்துல்லாவின் சடலத்தின் முதுகெலும்பும் கொஞ்சம் சதைத் துணுக்குகளும் தான் மிஞ்சியிருந்தன. அவற்றை ஒரு குழிக்குள் தள்ளிப் புதைத்தது கும்பல். பின்னர் அப்படியே கிளம்பிப்போய் மன்னர் முதலாம் ஃபைசலின் சிலையை உடைத்துத்தள்ளி டைக்ரிஸ் நதிக்குள் மூழ்கடித்தது. இவற்றிலெல்லாம் குதூகலத்துடன் கலந்துகொண்ட சதாமுக்கு ஆத்திரம் இன்னும் குறையவில்லை.

அவனுக்கு பிரதமர் நூரிசேத்தின் ஞாபகம் வந்தது. 70 வயது நூரிசேத் ஆங்கிலேயர்களின் அப்பட்டமான கையாளாக இருந்து ஈராக்கியர்களை ஆட்டிப்படைத்தவன். "கிழட்டு நரி" என்று வர்ணிக்கப்பட்டவன். "என்னைக் கொல்லக் கூடிய மனிதன் இதுவரை பிறக்கவில்லை" என்று ஆணவத்துடன் கூறிவந்தவன். "நூரிசேத் என்ன ஆனான்?" என்று அங்கிருந்தவர்களிடம் விசாரித்தான் சதாம். இராணுவத்தின் கையில் சிக்காமல் தப்பி விட்டானாம் என்ற பதிலைக் கேட்டு ஏமாற்றம் அடைந்தான். அந்த பிரிட்டிஷ் ஏஜண்டை உயிரோடு விடக்கூடாது என்று மனசுக்குள் படபடத்தான்...

(தொடரும்)

## கடற்படை அதிகாரிகளிடம் ஜனாதிபதி ஆ.குழு விசாரணை

(கொழும்பு)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்டு வரும் விசாரணையின் ஒரு கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை கடற்படை அதிகாரிகளிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜனாதிபதி ஆணைக்குழு கிரிந்த கடற்படைப்பிரிவின் அதிகாரியிட்மும் கொழும்பு கடற்படை தனிமைப் பிரிவின் சட்டப பிரிவு அதிகாரியிடமும் நேரடியாக விசாரணைகளை மேற்கொண்டு சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளது.

2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி காலை குறிப்பிட்ட முகாம்களுககிடையே ஏற்பட்ட கொலைத்தொடர்பு பற்றியும் வேறு நிலைமைகள் குறித்தும், ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் சட்டத்தரணி ஜெகத் ஜீ சில்வாவினால் விசாரணைகள் நடத்தப்பட்டன. இவ் ஆணைக்குழு பலதரப்பட்டவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமாகவே கடற்படை அதிகாரிகளிடம் விசாரணை நடாத்தபபட்டுள்ளது. அனைவரிடமும் (பொதுமக்கள்) உட்பட விசாரணைகளை மேற கொண்டவுடன் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்.

சுனாமி அனர்த்தங்களினால் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் காவு கொளளப்பட்டதுடன் நாடும் பெரும் அழிவுகளைச் சந்தித்தது குறிப்பிடத்தக்கது.(க-8)

## தொழில் வாய்ப்பின்மை பிரச்சினைக்கு கணனித் துறையூடாக தீர்வு காணலாம்

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் தொழில் வாய்ப்பின்மைப் பிரச்சினைக்கு கணனித துறையூடாக தீர்வு காணமுடியும் என்று விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சா திஸ்ஸ விதாரண நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதற்காக நாட்டில் கணனிப் பாடநெறி மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அமைச்சா பேராசிரியர் திஸ்ஸ விதாரண இதனைத் தெரிவித்துள்ளார்.

கணனிகள் தொடர்பான தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாக நிலவும் வெற்றிடங்கள் நிரப்புவதில் ஆங்கில அறிவு போதிய அளவு இல்லாமை பெரும் சிக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதனால் சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-2

## தபால் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர்களாக பட்டதாரிகள் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

கிழக்கு மாகாண தபால் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர்களாக பட்டதாரிகளை நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகி 24ஆம் திகதி வரை நடைபெறும். மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இன்றும், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாளையும், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 24ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் அதிபர் ஹின்ஸ் வ்ம லரத்தின தெரிவித்துள்ளார்.

இவ் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான கடிதங்கள் ஏற்கனவே விண்ணபபித்த பட்டதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிககப்பட்டுள்ளது. நேர்முகட் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்காத விண்ணப்பதாரிகள் கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் அதிபர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

மாகாண பிரதி அஞ்சல் அதிபர் அலுவலகத்தில் குறிப்பிட்ட தினங்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.30 வரை நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. (க-9)

## கணனிக் குற்றச் செயல்கள் தடுக்கப் புதிய சட்டமூலம்

(கொழும்பு)

கணனிக் குற்றச்செயல்கள் தொடர்பாக புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு நீதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி கணனிக் குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு 1 இலட்சம் முதல் 3 இலட்சம் ரூபா வரை அபராதம் விதிக்கவோ அல்லது 6 மாதம் முதல் 3 வருட காலத்துக்கான சிறைத்தண்டனை விதிக்கவோ அல்லது இவை இரண்டையும் ஒருங்கிணைத்து வழங்கவோ உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணனி ஒன்றில் களஞ்சியப்படுத்தும் தகவல்களை அழிப்பது அல்லது துஷ்பிரயோகம் செய்வது, அதில் வேறொரு விடயத்தை இணைப்பது, மாறறங்களைக் கொண்டுவருவது போன்றவை இந்தச் சட்டத்தின் கீழ் கணனிக் குற்றச்செயல்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கணனிகள் மூலம் தேசிய பாதுகாப்புக்கு, தேசிய பொருளாதாரத்துக்கு அல்லது பொதுமக்களின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுததும் நடவடிக்கைகளுக்கு ஒரு வருடத்துக்கும் குறையாத 5 வதுடத்துக்கும் மேற்பட்ட சிறைத்தண்டனை வழங்குவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதுதொடாபான சட்டமூலத்தை நீதியமைச்சா டபிள்யு டி.ஜே. செனவிரத்ன பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். (அ-2)

## ஊடகங்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும்!

### பிரதியமைச்சர் டிலான் பெரேரா

நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளை மேலும் மோச மடையச் செய்யாமல் ஊடகநிறுவனங்கள் பொறுப் புணாச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று பிரதி யமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொறுப்புணர்ச்சி வாய்ந்த ஊடகக் கலாசாரம் இயன்றளவு விரைவில உருவாக்கப்பட வேண்டும் என் றும் அவர் வற்புறுத்தியுள்ளாா. ஊடகப் பிரதியமைச் சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர் அலுவலகத்தில் கடமைகளை ஏற்றுக்கொண்ட சமயம் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

ஊடகத்துறையை மேம்பாடடையச் செய்வதற்கென தீவிர மாற்றங்கள் கொண்டுவரப்படும் ஒரே நாடு என்ற ஜனாதிபதியின் தொலைநோக்கைக் கட்டியெழுப்பு வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என் றும் பிரதியமைச்சர் மேலும தெரிவித்துள்ளார்.(க-7)

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் - குறள்

# வலம்புரி

## சட்டங்களை அமுல்படுத்த அரச அமைப்புகள் துணியவேண்டும்

சட்டம் என்பது மக்களை ஒழுங்குபடுத்தும் கருவி. அதனை சரியான முறையில் அமுல்படுத்துகின்றபோது நாட்டில் கொலை, கொள்ளை, களவு போன்ற தீயசெயல்களுக்கு இடமில்லாமல்போகும்.

எனினும், சட்டங்களை அமுல்படுத்த வேண்டியவர்கள் பாராமுகமாக இருந்தால் நிலைமை படுமோசமாகவே இருக்கும். இது விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் முதல் உயர்நீதிமன்றங்கள் வரை தமது கடமைகளைச் செய்வதில் அதி தீவிரம் காட்டவேண்டும்.

அவ் வகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தமது கடமைகளை - தத்தம் பிரதேசத்தில் அமுலாக்கப்பட வேண்டிய அடிப்படைச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்நிற்பதைக் காணமுடிகின்றது.

குறிப்பாக, யாழ். குடாநாட்டில் வீதிகளில் திரிகின்ற கட்டாக் காலி ஆடு, மாடு மற்றும் நாய்களின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் ஏற்படும் விபத்துக்கள் மனித உயிர்களைக் காவுகொள்கின்றன.

கால்நடைகளை வளர்ப்பது தவறன்று. ஆனால், அவற்றை கட்டி வளர்க்க வேண்டுமென்பது உள்ளூராட்சி மன்றங்கள் கூறும் சட்டமாகும். அவ்வாறாயின் யாழ். குடாநாட்டில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்து வருவதற்கான காரணம் தான் என்ன?

உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன. அவை அறவிடப்படவேண்டிய வரிகளை அறவிடுகின்றன. அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்கள் சம்பளம் பெறுகின்றனர். இவ்வாறு உள்ளூராட்சி சபைகள் தங்கு தடையின்றி இயங்கும்போது கட்டாக்காலிகளைக் கட்டுப் படுத்துவதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின், எங்கோ, ஏதோ தவறு நடை பெறுகின்றது என்பது புலனாகின்றது அல்லவா?

கால்நடைகளைக் கட்டி வ்ளர்க்கவேண்டும் என்ற சட்டம் பொதுமக்களின் காதுகளில் உரத்து கூறப்படுவதும், அதனை அவர்கள் நடைமுறைப் படுத்தத் தவறும்பட்சத்தில் கிடைக்கக்கூடிய தண்டனைகளை தெளிவுபடுத்துவதும் உள்ளூராட்சி மன்றங்களின் தலையாய கடமையாகும்.

இதனை முதலில் செய்யும்போது சட்டத்தை மதிக்கின்ற மக்கள் அதற்கு கட்டுப்படுவர். அதன் பின்னர் இருக்கக்கூடிய தவறுகளுக்கு தண்டனைகளே வழியாகும்.

தண்டனைகளை விதிக்கும்போது இருக்கக்கூடிய மிகப்பெரிய விடயம் பக்கச் சார்பற்ற தீர்ப்பாகும். அதாவது செல்வாக்கு என்ப தற்கு எவ்விடத்திலும் இடமில்லாது போகின்ற போது சட்டத்தை அமுல்படுத்துவதும், அதனை பின்பற்றச் செய்வதும் சுலபமாகிவிடும்.

யுத்தத்தால் பாதிப்படைந்த யாழ். குடாநாடு யுத்தத்தால் மட்டும் அழிந்துபோகவில்லை. மாறாக சட்டங்கள், சம்பிரதாயங்கள் என்பவற்றை மதிக்கும் மனநிலையும் மாறி இன்று மிகப்பெரும் சீரழிவை நாம் சந்தித்து வருகின்றோம்.

சட்டங்களை மதிப்பதில் தவறுகள் ஏற்படுகின்ற போதே குழப்பங்களும், ஆபத்துக்களும் நடக்கின்றன. மதில்கட்டுவது முதல் கால் நடைகள் வளர்ப்பது வரை இருக்கக்கூடிய சட்டங்களை, அது தொடர்பில் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவணங்களை பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் நீதிமன்றங்களில் குவிகின்ற வழக்குகளையும் பொதுமக்கள் செய்கின்ற செலவுகளையும் குறைத்துக்கொள்ள முடியும்.

# பெரும்பான்மைப் பலத்தைப் பெறவே ஜனாதிபதி எம்முடன் கூட்டுச் சேர்ந்தார்

## -விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சியினால் விடுக்கப்பட்ட நெருக்குதலகளினால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை ரத்துச் செய்வதற்காகப் பாராளுமனறில் கூடுதலான பாராளுமன்ற உறுபபினர்களின் எண்ணிக்கையைப் பெறுவதற்கு ஜனாதிபதி 2004ஆம் ஆண்டு தேர்தலின் போது ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்ததாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ மகாரம பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாறறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தனது இரண்டு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள தீர்மானித்தார்.

ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து கொடுக்கப்பட்ட நெருக்குதல்கள் இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில மீணடும் அவரால் போட்டியிட முடியாது. இதனால் ஜனாதிபதித் தேர்தலை இல்லாமல் செய்து தமது அரசியல் எதிர்காலத்தை பாதுகாத்துக் கொள்வதாகும்.

இந்த இரண்டு விடயங்களையும் நிறைவேற்றிக்கொள்ளவே ஜனாதிபதி 2004ஆம் ஆண்டு தேர்தலில் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்தார். ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தமைக்கு நாட்டுக்குப் பல விடயங்களை காரணமாகக் கூறினார்.

ஜனாதிபதியின் திட்டங்களில் இரண்டாவது பிரச்சினையை பார்த்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது. அந்த இரண்டாவது காரணம் என்ன? 113 பாராளுமன்ற உறுப்பினர்களைச் சேர்த்துக கொண்டு பாராளுமன்றத்தை அரசியல் அமைப்புச் சபையாக மாற்றிக்கொண்டு அதன்மூலம் ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்து தனது அரசியல் எதிர்காலத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கை நிறைவேற்ற முற்பட்டார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந-8)

# மேஜர் நிஜாம் முத்தலிப் கொலையுடன் எனது மகனுக்குத் தொடர்பில்லை

## -முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுப் பிரிவு கட்டளையதிகாரி லெப். கேணல் நிஜாம் முத்தலிப் படுகொலை வழக்கில் தனது மகனுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்று முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல கூறியுள்ளார்.

முத்தலிப் கொலை வழக்கில் தொடர்புடையவராகக் கூறப்படும் தேசப்பிரியவின் நெருங்கிய நண்பர் தான் பலகல்லவின் மகன என்று அண்மையில் செய்திகள் வெளியாகின.

இது தொடர்பாகப் பலகல்ல கூறுகையில், பொலிஸாரின் சந்தேக நபரான தேசப்பிரியவின் நண்பர்தான் என் மகன். ஆனால் இந்தக் கொலைக்கும் என் மகனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இது தொடர்பாகப் பொலிஸாரிடம் உரியவிளக்கம் அளித்துவிடுமாறு எனது மகனுக்கு அறிவுறுத்தியுள்ளேன் என்றார்.

தேசப்பிரிய உள்ளிட்ட 7 பேர் இக்கொலை வழக்கில் சந்தேக நபர்களாகக் கருதப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுளளமை தெரிந்ததே. (ற)

# சிங்கள பௌத்த நாடான இலங்கையில் புத்தர் சிலையை வைக்க உரிமையில்லையா?

## ஹெல உறுமய எம்.பி வட்டபொலகீர்த்தி தேரர்

(கொழும்பு)

சிங்கள பௌத்த நாடான இலங்கையில் நாம் விரும்பிய இடத்தில் ஒரு புத்தர் சிலையைக் கூட வைக்க உரிமையில்லாவிட்டால் இது சிங்கள பௌத்த நாடாக இருந்து என்ன பயன்? அப்படியாயின் புத்தரை எங்கே வைப்பது? இவ்வாறு கேளவி எழுப்பியுள்ளார் ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் வட்டபொலகீர்த்தி தேரர்.

திருமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாகப் பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுபபினர் இரா.சம்பந்தன் சிறப்பு கூற்றொன்றை வெளியிட்டு உரையாற்றிய போதே குறுக்கிட்டு தேரர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

மேலும், இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை முழு உலகமுமே ஏற்றுக்கொண்டுள்ளன. திருமலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை 40 ஆண்டு காலமாக அப் பகுதியில் காணப்படுகிறது. எனவே, புத்தர் சிலையினை அகற்றுவதறகு அனுமதிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (ற)

### பாவனையாளர்களை சூறையாடும்

# வர்த்தகர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைக்க விசேட திட்டம்

(கொழும்பு)

முக்கியமான சமய நிகழ்வுகள் நடைபெறும் காலத்தில் பாவனையாளர்களை சூறையாடும் வர்த்தகர்களை சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கும் விசேட திட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஆடிமாதத்தில் கதிர்காமத்தில் மஹோற்சவம் நடைபெறுகின்றது. இதேவேளை, சிவனொளிபாத மலைக்குச் செல்லும் அடியார்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன.

இவ்வாறு நாட்டின் பல பாகங்களில் சமய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்நிலையில் இவற்றை மையமாக வைத்து செயற்படும் வர்த்தகர்கள் பல மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று அதிகாரசபைக்கு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக அதன் தலைவர் எம்.ஐ. எம்.மூஸிம் தெரிவித்துள்ளார்.

அதிகாரசபை அமுல் செய்யும் விசேட திட்டத்தின் கீழ் கதிர்காமம சென்ற அடியார்களை சூறையாடிய 40 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகளாக இனம் காணப்பட்டவர்களுக்கு ஒரு இலட்சத்துக்கு மேலான தொகை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, தரம் குறைந்த உணவுகளையும் பானங்களையும் விநியோகித்தமை, விலைப்பட்டியலைப் பார்வைக்கு வைக்காமை போன்ற குற்றச் சாட்டுக்களின் அடிப்படையில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. (க-9)

# ஐ.நா அதிகாரி வொக்கா எழிலனுடன் சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் இலங்கைக்கான வெளிக்கள அதிகாரி யு.டி. வொக்கா நேற்று முன்தினம் சம்பூரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இக கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.00 மணி வரை சம்பூர் அரசியல்துறை செயலகத்தில் நடைபெற்றது.

இதன போது வெளிக்கள அதிகாரி வொக்கா எழிலனிடம் அமைதிச் சூழ்நிலையைத் தொடர்ந்து பேணி வருவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இதறகுப் பதிலளித்த எழிலன், கடந்த 3 வருடங்களாக சமாதான நடைமுறையைப் பின்பற்றி வரும் அதேவேளை அண்மைக்காலங்களில் தமது உறுப்பினர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்ற போதும் வன்முறையை நாடாமல் அமைதி காத்து வருவதாகக் குறிப்பிட்டுளளார். (ற)

# பொதுக்கட்டமைப்புக்கு எதிரான வழக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதி தீர்ப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான வழக்கினை விசாரணை செய்யும் அதிகாரம் மாவட்ட நீதிமன்றத்திற்கு இருக்கின்றதா? இல்லையா? என்பது தொடர்பான உத்தரவு அடுத்த மாதம 15 ஆம திகதி பிறப்பிக்கப்படுமென கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி கே.எச்.சுமித்ரபால தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே.வி.பி மற்றும் தேசப்பற்றுளள தேசிய இயக்கம், தேசிய பிக்குகள் முன்னணி என்பன தனித்தனியாக தாக்கல் செய்துள்ள 3 மனுக்கள் மீதான விசாரணை கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த விசாரணையின் போதே நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ற)



## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

எப்போதும் "நானே அவன்" என்ற எண்ணம் மட்டும் விலக வேண்டாம். இந்த சொற்கள் உங்கள் நெஞ்சில் உள்ள குப்பைகளை எல்லாம் எரித்துவிடும். உங்களுக்குள் அடங்கிக் கிடக்கும் சக்தியை இவை எழுப்பிவிடும்.

சுவாமி விவேகானந்தர்

# புங்குடுதீவு திலீபன் மருத்துவமனை இராணுவத்தினரால் சுற்றிவளைப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் அமைந்துள்ள தியாகி திலீபன் மருத்துவமனை கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிரசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

திடீரென அப்பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் மருத்துவமனையைச்சுற்றி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இது குறித்து விடுதலைப்புலிகளின் புங்குடுதீவு அரசியல்துறை பொறுப்பாளரால் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புகுழுவில் முறையிடப்பட்டுள்ளது. (ச-126)

# நிதி தொடர்பான அறிக்கை விரைவில் சமர்ப்பிக்க உறுதி

(கொழும்பு)

ஆழிப்பேரலையின் பின்னர் கிடைத்த நிதி தொடர்பான முழுமையான அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்க கணக்காய்வு நாயகம் உறுதியளித்துள்ளார்.

இந்த அறிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பொதுக் கணக்கு குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற கணக்காய்வு தொடர்பான கூட்டத்தில் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் திரிபால அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துக்களைப்பெற்றுக்கொள்ளும் வகையில் புனர்வாழ்வு அமைச்சின் செயலர் ஜெயசிங்க அழைக்கப்பட்டிருந்தபோதும், அவர் சமுகமளிக்கவில்லை.

இவரே பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் அரசாங்கத் தரப்பில் கைச்சாத்திட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-2,9)

## இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு பொதுமன்னிப்பு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு மன்னிப்பு வழங்குவது குறித்து பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

தப்பியோடியவர்கள் சட்டரீதியாக ஓய்வுபெறச் செய்யும் நடவடிக்கை எதிர்வரும் 25 ம் திகதியிலிருந்து ஓகஸ்ட் 5 வரை நடைபெறவுள்ளது.

2003 ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின் தப்பியோடியவர்களுக்கு இவ்வாய்ப்பு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

## பரீட்சை

(கொழும்பு)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் முதற்தடவையாக கல்விப் பொதுத் தராதர உயர்தர முதலாம் வருட மாணவர்களுக்கான பொதுத் தகவல் தொழில்நுட்பப் பாடநெறிக்கான பரீட்சையை அடுத்த மாதம் 21 ஆம் திகதி நடாத்தவிருக்கிறது.

தேசிய மட்டப் பரீட்சை ஒன்று உயர்தர முதலாம்தர மாணவர்களுக்கு நடத்தப்படவிருப்பது இதுவே முதற்தடவையாகும்.(க.7)

# வ.பி. போக்குவரத்து சபைக்கு யாழில் 180 வெற்றிடங்கள்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிலுள்ள டிப்போக்களில் 180 வெற்றிடங்கள் இருப்பதாக போக்குவரத்து அமைச்சு தெரிவிக்கின்றது. 94 சாரதிகளுக்கும், 87 நடத்துனர்களுக்கும் வெற்றிடங்கள் உள்ளன. போக்குவரத்து அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பருத்தித்துறை காரைநகர் டிப்போக்களுக்கும் 20 பஸ்கள் தேவைப்படுவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# கல்வியங்காட்டு இளைஞன் வல்வை வைத்தியசாலையில்

## பெற்றோரைத் தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மயக்கமடைந்த நிலையில் கல்வியங்காட்டைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த ஆனந்தன் மயூரன் (வயது 22) என்ற இளைஞனே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மயக்கமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிரஸ்தாப நபர் சித்த சுவாதீனமற்ற நிலையில் காணப்படுவதாகவும் அவரின்பெற்றோரை உடனடியாக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் தன்னுடன் தொடர்புகொண்டு அவரை அழைத்துச்செல்லுமாறும் அவ்வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி க. மயிலேறும்பெருமாள் கேட்டுள்ளார். (ச)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சிறுப்புலம் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய மண்டலாபிஷேக பூர்த்திவிழா, சங்காபிஷேகம் இன்று காலை நடைபெறவுள்ளது. (ச)

### நிலையான...

களுடனும், தொழிற்சங்கங்களினுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி நாட்டிற்கு பொருத்தமான வகையில் கொள்கை ஒன்று தயாரிக்கப்படவேண்டும்.

இதற்கு சகல கட்சிகளினதும் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று அவர் கூறினார். அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற இலங்கை கைத்தொழிலாளர் சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவர் இவற்றைத் தெரிவித்தார். (ச-9)

### லண்டனில்...

வெடிப்புக்கள் காரணமாக 50 இற்கும் மேற்பட்டோர் பலியாகியும் 800 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்றைய குண்டுத்தாக்குதலை அடுத்து அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொலிஸாரும் தீவிர சோதனை நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். (ச-8)

# அக்கரைப்பற்றில்...

அக்கரைப்பற்று தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் உள்ள நலன்புரிநிலைய அகதி முகாமில் காவல் கடமையிலிருந்த விசேட அதிரடிப்படையினர் மீது நேற்று தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலை மேற்கொண்டவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றுள்ளனர்.

விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸ் கூட்டுப்பாதுகாப்பு காவல நிலையத்திற்கு அருகாமையில் இக்கைக்குண்டு வீச்சு நடைபெற்றுள்ளது.

இத்தாக்குதலை மேற்கொண்டோர் மீது படையினரால் பதில் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டபோதிலும் அந்நபர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

இதனையடுத்து ஆத்திரமடைந்த படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அத்துடன் பொதுமக்கள் தாக்கப்பட்டதுடன் கடைகள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கடைகளை மூடுமாறும் படையினர் அச்சுறுத்தல் விடுத்தனர். வீதியால் சென்ற அனைவரும் மறிக்கப்பட்டு தீவிரசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவ்வழியால் மோட்டார் சைக்களில் சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் அதிரடிப்படையால் வழி மறிக்கப்பட்டு அவர்களின் மோட்டார் சைக்கிள்களை பலவந்தமாக பறித்து தமது தேவைகளுக்காக எடுத்துச்சென்றுள்ளனர்.

படையினரின் இந்த அடாவடித்தனம் காரணமாக நேற்று மாலைவரை அப்பிரதேசத்தில் பதற்றநிலையும் மக்கள் மத்தியில் பீதியும் காணப்பட்டது.

இதேவேளை அக்கறைப்பற்று அரசியல்துறை அலுவலகமும் அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டது. இத்தாக்குதல் சம்பவங்கள் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிடப்பட்டது. (ச)

மண்டைதீவு சிறுப்புலம்

அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலய

மண்டலாபிஷேக பூர்த்திவிழா

சங்காபிஷேகம்

மெய்யன்புடையீர்!

லங்காபுரியின் வட்பால் அமைந்து சகல தமிழ் சைவப் பெரியார்கள், புலவர்கள், அந்தணப் பெருமக்கள், புராணிகள் செறிந்து வாழும் யாழ். மண்டைதீவு சிறுப்புலம் பகுதியில் அமைந்திருக்கும் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் நிகழும் மங்களகரமான பார்த்திபவருடம் ஆடி 6 ஆம் நாள் இன்று (22.07. 2005)வெள்ளிக்கிழமை மண்டலாபிஷேகப் பூர்த்தி சங்காபிஷேகம் செய்ய திருவருள் துணைகூடியுள்ளதால் அத்தருணம் பக்தர் பெருமக்கள் அனைவரும் வருகைதந்து கிரிகைகளில் பங்குபற்றி வழிபாடுகள், தொண்டுகள்செய்து மண்டலாபிஷேகம் பூர்த்திவிழா பலனைப்பெற்று உய்ய முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

அடியார்கள் திரண்டுவந்து விழாவைச் சிறப்பித்து தங்களாலியன்ற அபிஷேகத் திரவியங்களையும் கொடுத்து பூர்த்தியில் இடம்பெறும் **மகேஸ்வரபூஜையிலும்** கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி வேலாயுதபிள்ளை இராசம்மா

(தர்மகர்த்தா)

(9748)

மனோகரா

யாழ்ப்பாணம்

இன்று முதல்

மாதவன், சதா,

கோவை சரளா நடித்த

பிரியசகி

அதிரடி வெளியீடு இந்தியாவிலும்

இலங்கையிலும் ஒரேதினத்தில்

கா.நே:10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

15.07.2005 முதல்

அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு

சேர்ந்து கலக்கும் அடிதடி காதல் காவியம்



கா.நே:10.30,2.30.6.30,9.30

நிறைஞ்சனாஸ்

(சங்கானை)

ரஜனி, நயந்தாரா

நடித்த இன்று முதல்

சந்திரமுகி

கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

ஐந்து நூல்கள் வெளியீட்டு விழா

**காலம்:**

இன்று 22.07.2005 வெள்ளிக்கிழமை

**நேரம்:**

காலை 8.30 மணி

**இடம்:**

கல்லூரிக் கலையரங்கு

**தலைவர்:**

திரு. க.கமலநாதன்

(உப பீடாதிபதி நிர்வாகம் யா.தே. க.கல்லூரி)

*8.45 - 8.55 ஆசியுரை*

சிவநெறித் தவமகன் ஆறு. திருமுருகன்

(உப அதிபர் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

*8.55 - 9.05 தலைமையுரை*

*9.05 - 9.15 வெளியீட்டுரை*

கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள்

(பீடாதிபதி யா.தே.க.கல்லூரி)

**நூல்கள் வெளியீடு**

9.15 – 9.22 1.உணர்வுகளின் பயணம்

செல்வி தர்சினி ஆனந்தராசா (முகிழ்நிலை ஆசிரியர் ஆங்கிலத்துறை)

ஆய்வுரை: திரு. ஆ.இரவீந்திரன (விரிவுரையாளர், யா.தே.க.கல்லூரி)

9.22 – 9.29 2. தேயாத நிலவுகள்

செல்வி ஆரபி சிவஞானராஜா (முகிழ்நிலை ஆசிரியர் ஆங்கிலத்துறை)

ஆய்வுரை: கவிஞர் திரு.பா.மகாலிங்கம்

(ஆசிரியர் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

9.29 – 9.36 3. முதன்முதலாக

செல்வி கஸ்தூரி கனகலிங்கம்

(முகிழ்நிலை ஆசிரியர் ஆங்கிலத்துறை)

ஆய்வுரை: திருமதி ஜெ.உதயகுமார்

(விரிவுரையாளர் யா.தே.க. கல்லூரி)

9.36 – 9.43 4. உண்மை நிழல்கள்

செல்வி தனுசா பொன்னம்பலம் (ஆரம்பக் கல்வித்துறை)

ஆய்வுரை: செல்வி நி.நல்லையா(விரிவுரையாளர் யா.தே.க. கல்லூரி)

9.43 – 9.50 5. உயிரூட்டும் கடதாசி

திரு.த.சிவகுமார் (விரிவுரையாளர், யா.தே.க கல்லூரி)

மதிப்பீட்டுரை: திரு. எஸ்.கே.யோகநாதன்

(மேலதிக பீடாதிபதி யா.தே.க. கல்லூரி)

நன்றியுரை

கோப்பாய் 22.07.2005 (C-1485) யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.